தாயகம்

- மேத்தாதாசன்
- விஷ்ணுநாதன்
- பூமணிமைந்தன்
- அறநிலா
- ஏகலைவன்
- தேவி பரமலிங்கம்
- பொன். பொன்ராசா

"பொன்மனத்தின் வாசலிலே
போட்டுவைத்த எழிற்கோலம்!
புழுதியிலே வாழ்பவரின்
பொங்குகின்ற பெருமூச்சு!"

— ஈழவாணன்.

12 ஜூலை - செப்ரம்பர் 1984

3-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலங்கையின் இலக்கியத்
தாகத்தைத் தீர்ப்பது

"தாரகை"

நிதி பற்றுக்குறையால்
தாம் விரும்பும்
பொருட்களைப் பெறமுடியாது
மனந் தளர்பவர்களின்
மனோ தாகத்தைத் தீர்ப்பது

"த பினான்ஸ்"

TFC

த பினான்ஸ் கொம்பனி லிமிட்டட்

19 மத்திய வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி: 065 - 2896

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகை

கதைகளில் வரும் பெயர்கள்,
சம்பவங்கள் யாவும் கற்பனையே.
இடம்பெறும் ஒவ்வொரு சிருஷ்டியும் அவரவர் தனித்துவம்.
பொறுப்பும் அவர்தம்மாட்டே.
— ஆ-ர்.

ஜூலை
செப்.
1984
12

"THARAKAI" 21/4, FATIMAGIRI ROAD, BATTICALOA, Sri Lanka

சிறுபான்மையினர் சுதந்திரமென்பது பெரும்பாலும் பேச்சளவினதுதானே தவிர நடைமுறைச் சாத்தியமானதல்ல. நலவுரிமைகளும் அப்படியே. ஒருவனது பேச்சுச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தலாம்; எழுத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தலாம்; சிந்தனைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதானால்; ஒன்று — அவன் மரிக்கவேண்டும், அல்லது சித்தசுவாதீனமாக வேண்டும். இந்த இரண்டுமில்லாத பட்சத்தில், ஒரு நல்ல சிந்தனையாளன் தீவிர செயற்பாட்டாளனாகவும் இருந்துவிட்டால் விளைவுகள் பாரதூரமாகிப் போய்விடுவதுண்டு.

நாம் எதையுமே வார்த்தைகளால் விளாசித் தள்ளலாம். ஆனால், வீசிய வார்த்தைகளை மீளப்பெறுவது முடிந்த காரியமல்ல. செயற்பாடும் வெகு சுலபமானதல்ல. எந்த ஒரு காரியத்தையும் ஆற்ற முனைகையில் அவதானமாக — அதன் பக்க விளைவுகளையும் ஆலோசித்து அனுசரித்தே செயற்படவேண்டும். ஆராயாமல் இறங்கிவிட்டு அல்லற்படுவதில் பிரயோசனமில்லை.

சிறுபான்மைத் தமிழ் மக்களாகிய நாம், ஒவ்வொன்றாக இழந்து, இன்று பத்திரிகைகளில் புனைபெயரில் எழுதக்கூட சுதந்திரமற்ற நிலைக்குப் பின்தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இங்கு சகல மொழிப் பத்திரிகைகளும் இதனால் பாதிக்கப்படுவது உண்மையெனினும், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இது மற்றோரிழப்பாகும். இந்தப் புனைபெயர் விவகாரத்தில் அரசு ஒன்றிற்குப் பலதடவைகள் ஆலோசித்துச் செயற்படுவதே நன்மை பயக்கும்.

புனைபெயருக்குரியவரின் சொந்தப் பெயர் விலாசங்களை ஒவ்வொரு பத்திரிகையாளரும் சரியான முறையில் அறிந்து வைத்திருக்கவேண்டும் என்று குறிப்பிடுவது வேறு; புனைபெயரையே பாவிக்கக் கூடாதென்று உத்தரவிடுவது வேறு. பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு, எழுத்தாளன் யார்? அவன் பூர்வாங்கமென்ன? அவன் எந்த இனத்தவன்? எவ்வளவு படித்தவன்? எத்தனை பட்டங்கள் பெற்றவன்? என்பதெல்லாம் தெரியவேண்டிய அவசியமில்லை. தகுதியையும் தேவையையும் பயன்பாட்டையும் கருதியே பத்திரிகையில் செய்திகளுக்கோ படைப்புகளுக்கோ முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஒருவன் புனைபெயரில் எழுதவில்லையென்றே வைத்துக்கொள்வோம். அவன் குறிப்பிடும் பெயரை மட்டும் சொந்தப் பெயரென்று உறுதிப்படுத்துவது எங்ஙனம்?

போகிற போக்கைப் பார்த்தால், தேசிய அடையாள அட்டையுடன் நேரில் கொண்டு வரும் விஷயங்கள் மட்டுமே பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்று பத்திரிகைகளில் அறிக்கை விடுக்கவேண்டிய நிர்ப்பந்தமே ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லைப் போலும்.

இதே வேளையில் இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். ஒருவரது பிரபலமான புனைபெயரை இன்னொரு கற்றுக்குட்டி தனக்கு வைத்துக்கொண்டு 'டமார'மடிக்கும் செயலைக் கண்டித்தேயாகவேண்டும். இத்தகைய விஷமிகள் ஒருவரது சொந்தப் பெயரைக்கூட களங்கப்படுத்தமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இந்தப் புனைபெயர் விவகாரத்தை அரசு மறுபரிசீலனை செய்வது நல்லதென்பதையே இங்கு மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைத் தேடி

— அறநிலா —

எல்லோரும் விழித்துப் பார்த்தனர்
ஐந்துபேர் செத்துக் கிடந்தனர்
மூன்று குமர்ப் பிள்ளைகளும்
சிறியதொரு பாலகனும்
அவர்களின் தாயொருத்தியும்
தகப்பன் உலகில் இருக்கவில்லை
வறுமைக் கோலமது
அவ்விடத்தே ஒரு கடிதம்
எடுத்தொருவர் பலமாக வாசித்தார்
கடிதத் தலைப்பு மூத்தவள் பெயரில்.

★

எல்லாமென் ஏற்பாடே!
என் வயது முப்பதிப்போது
வரனென்றும் கிடைக்கவில்லை
இருபத்தேழு, இருபத்தைந்தெனத்
தங்கைகளுமிருவர்
சிறிய தம்பியொருவன்
உம்மா நெடுநாள் வருத்தக்காரி
வரவுப் பக்கம் எதையும்
பதியாத கணக்கு
செலவுப் பக்கத்தை நிறைக்க
வாழ வழியில்லை இங்கே
இப்போதின்பமாய் இருப்போம்

எங்களின்ப வாழ்வுக்கு வழியமைத்த
நஞ்சுப் போத்தலுக்குக் கோடி நன்றிகள்!
எங்கள் வயிற்றுப் பசிதனை
அடைக்க அலைகையில்
'உத்தமர்' பலர் பிரதியுபகாரமாய்
'அந்தப்' பசியை அடைக்கக் கோரினர்
முடியவில்லை எங்களால்
பலவந்தப் பறிப்புகள் வேறு
கிடைத்த தொழில் இதொன்றுதான்.
எங்களால் செய்ய முடியவில்லை
சில நிமிடம் விலை பேசப்
பலர் வந்து நின்றனர்
எங்களால் மாப்பிள்ளை மாடுகளை
விலை பேச இயலவில்லை
எங்களுக்கொரு உதவி செய்யுங்கள்
கேட்கமுன் சொல்லி விடுகின்றோம்
எங்களைப் புதைத்து விடுங்கள்
இது நீங்கள் செய்வீர்கள்
நாற்றத்தை உங்களால்
பொறுக்க முடியாதே
எங்களைப் படைத்துவிட்டு
வேடிக்கை பார்த்த, பார்க்கின்ற
அந்த இறைவனைத் தேடிப் போகிறோம்
பதிலென்ன சொல்வான்?
ஓடியொழிந்து கொள்வானுக்கும். ★

பிரச்சினைகள் நிறைந்த உலகின் மத்தியிலும் அதன் தன்மையை அறிந்து இனியவற்றையே கண்டு செய்தல் வேண்டுமென்ற பரிபக்குவம் கதிரின் எழுத்துக்கு முதிர்ச்சியையும் சமநிலையையும் அளித்தது. ஆனால் அந்தச் சமநிலையையும் மீறி ஆங்காங்கு அவர் உள்ளம் வெம்பிச் சாம்பியதுமுண்டு. உணர்வு நயமும் நேர்மையுள்ளமும் கொண்ட ஒருவருக்கு இவ்வாறு ஏற்படுவது இயல்பே.

— கலாநிதி க. கைலாசபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்தலும் உவத்தலும்

நமது பேராசிரியர்களுக்கு உலக அரங்கில் ஒரு பெருஞ் சிறப்பு இருக்கிறது. இதனை இவர்கள் எத்தனையோ சந்தர்ப்பங்களில் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த ஆண்டில் மணிவிழாக் காணும் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் இதற்கு விலக்கானவரல்லர். இலக்கியத் தென்றல், கலையும் பண்பும், தமிழர் சார்பு முதலாம் நூல்களை நல்கி இலக்கியக் களத்தின் நல்லறுவடைக்கு வித்திட்டவர். நாட்டுக்கூத்தை நவீனமயப்படுத்தி, நாடக உலகைச் சீர்படுத்தி, பல்கலைக் கழக பேராசானாக, துணை வேந்தராக, கலை இலக்கிய உலகின் பெரு விருட்சமாக நிழல்தரும் பேராசிரியரின் மணிவிழாவையொட்டி கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் கழகம், வெறுமனே மணிவிழாக் கொண்டாட்டத்துடன் விட்டுவிடாமல், மணி விழா மலரையும் வெளியிட்டுக் கௌரவித்தது. தொடர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் மணிவிழாக்களும் நூல் வெளியீடுகளும் அமர்க்களப்படுத்துகின்றன. வாழும்போதே கௌரவிக்கும் இத்தகைய நற்பணிகள் இனிவருங் காலத்திலும் தொடரவேண்டும். பேராசிரியரின் பணி மேன்மேலும் ஓங்கி வளர வாழ்த்துகிறோம்.

ஆக்கவுரிமை வியாபாரக்குறி பதிவாளரகத்தினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப் பெற்ற இலக்கியப் போட்டி விருதுகள் பற்றி ஏற்கனவே இப்பகுதியில் குறிப்பு வந்ததை வாசகர்கள் அதற்குள் மறந்திருக்க நியாயமில்லை. இந்தப் போட்டியில் கலந்துகொண்ட சில இளைய தலைமுறை எழுத்தாளர்களிடமிருந்து பல குற்றச்சாட்டுகள் வெளிவந்திருப்பது துர்ப் பாக்கியமே. பரிசு பெறாதவர்களின் மனக்குமுறல் என்று எளிதாக இந்த விவகாரத்தைத் தட்டிக் கழிக்கவும் முடியாதிருக்கிறது. இவர்கள் பரிசு பெறுவார்கள் என்பது எவ்வளவு நிச்சயமோ, இல்லையோ அது வேறு விஷயம்; ஆனால் குற்றச்சாட்டு நிராகரிக்கக்கூடியதல்ல. போட்டிகளின் நிபந்தனைகளைத் தெரிந்துகொள்ளாமல் போட்டியில் பங்குபற்றியதன்மூலம், பிரபல நாவலாசிரியரும் கவிஞரொருவரும் தாமும் பரிசு பெறாமற் போனதுடன், மற்றவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பையும் தட்டிப் பறித்துக்கொண்டார்கள் என்பதே குற்றச்சாட்டு. விதிமுறைகளை நன்கு அறிந்து அனுசரித்து நடப்பதன்மூலம் இத்தகைய குற்றச்சாட்டுக்களைத் தவிர்த்துக்கொள்ளலாமல்லவா?

இலக்கியப் போட்டிகள் நடத்துவோருக்கு புதிய சிக்கல்கள் தோன்றியிருப்பதை இப்போது அவதானிக்கமுடிகிறது. கணவனும் மனைவியும் ஒரு போட்டியில் முதலிரு பரிசுகளைத் தட்டிக்கொண்டார்கள். தகப்பனும் மகளும், சகோதரனும் சகோதரியும் கூடி பிறிதொரு போட்டியில் பரிசுகளைத் தட்டிக்கொண்டார்கள். (ஒருவரேகூட வெவ்வேறு பெயர்களில் எழுதிப் பரிசு பெற்றிருக்கவும் கூடும்.) சம்பந்தப்பட்ட போட்டிகளை நடாத்தியவர்கள் 'திறமைக்கு இடம் கொடுத்தோம்' என்று எளிதாகப் பதில் சொல்லக்கூடும். ஆனால் இவையெல்லாம் ஆரோக்கியமான விஷயங்களல்லவே!

— **கணன்.**

தனது வர்க்கத்தையும், தனது நாட்டையும் பாதிக்கின்ற சகலதையும் நுண்மையாக வாங்கிக்கொள்பவனே கலைஞன். தனது வர்க்கத்தின் காது, கண், இதயம் எல்லாமே அவன். அவனது குரலே, அவனது காலத்தின் குரல்.

— செ. கதிர்காமநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சில கவிதை நூல்கள்

மாதுளம் முத்துக்கள்

— அன்பு முகையதீன்

மனித மனத்தின் மெல்லியல் உணர்வுகள் மிக நளினமாக இவர் கவிதைகளின் மூலம் வெளிப்படுகின்றன. மனிதாபிமான உணர்ச்சிப் பிழம்பாக சிலவரிகள் அழகியலோடு நெஞ்சில் ஆழப் பதிகின்றன. இதுவே கவிஞருக்குக் கிடைத்த வெற்றியெனலாம். ஆங்காங்கே பல இடங்களில் கவிஞரின் ஆளுமை முத்திரை பதிப்பதையும் குறிப்பிட்டேயாக வேண்டும். எளிமையான சொற்பதங்கள் எவரையும் வாசிக்கத்தூண்டும் இயல்பினதாயமைகின்றன. ஒரு படைப்பாளியின் ஆற்றலை இனங்காண, அவனது நூற்றொகுதி அவசியம் என்பதற்கு இது ஒரு உதாரணம். புயலும் புதுமையும், ஓங்கி எழும்பும் உணர்ச்சி அலைகள், கதவுகளைத் திறந்துவிடு, உலகப் பரப்பிருந்தோர் ஓசை வந்து கேட்கிறது என்ற கவிதைகள் குறித் துரைக்கக் கூடியவை.

★

கருவறையிலிருந்து கல்லறைக்கு....

— கலைவாதி கலீல்

ஆடல், பாடல் இத்யாதி கலைகளிலெல் லாம் அசலக்கால் பதித்தவர் கலைவாதி கலீல். வானொலியில் வனப்பாகவிழும் கம்பீரமான குரலின் கம்பீரியத்தை ஏனோ இக் கவிதைத் தொகுதியில் காணமுடியவில்லை. அகலக்கால் பதித்ததால், ஆழப் பதிக்கத் தவறியிருப்பாரோ எனத் தோன்றுகிறது. முன்னர் வெளிவந்த இவரது 'ஒரு வெள்ளி ரூபாய்' சிறுகதைத் தொகுதியோடு ஒப்பிடுகையில் இந்தத் தொகுதி கொஞ்சம் நிமிர்ந்துதான் நிற்கிறது. ஆனால் இதுவே இவரது ஆற்றலுக்குக் கிடைத்த முழு நிறைவல்ல. கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பெயரை கணப்பொழுதில் தூக்கி எறிந்து விட்டதான ஒரு பிரமை நெஞ்சில் மெல்ல உதைக்கிறது. ''ஓ... அந்தச் சிகப்பு இரவு'' குறிப்பிட்டுப் பாராட்டக்கூடியது. தொகுதி முழுவதும் தேடிப்பார்த்தாலும் ஆறு கவிதை களாவது தேறுவது துர்லபம். மொத்தத்தில்— கலீல் என்னவோ சுவைஞர்களை நன்றாகத் தான் ஏமாற்றிவிட்டார். இனியொரு நாவலைத் தருவதற்கு முன்னர் காத்திரமான பிறிதொரு கவிதைத் தொகுதியைத் தருவதன் மூலம், இழந்த தனது பெயரைக் காப்பாற்றிக் கொள்வதுதான் புத்திசாலித்தனமானது.

★

விடியத்துடிக்கும் ராத்திரிகள்

— முல்லை அமுதன்

'நித்திய கல்யாணி' இவரது முதல் கவிதைத் தொகுதி. நித்திய கல்யாணிக்கும் இதற்குமிடையே ரொம்ப வித்தியாசம். உள்ளத்தை உரோஞ்சுகின்ற சமகால நிகழ்வு களின் உணர்ச்சி வெளிப்பாடுகள் மிகத் துல்லிய மாக—ஆழமாகவே பதிந்து அனல்கக்கும் கவி வரிகள் கவிஞரின் ஆளுமை வளர்ச்சியைக் காட்டுகின்றது. மீண்டும் மீண்டும் பட்ட அடி களின் வேதனைகள் நெஞ்சில் ரணமாக எரிவ தால் குமுறும் கவிஞர்,

'நாங்கள்
நெருப்புக் கோழிகளல்ல...
தோழர்களே
எங்களை
மீண்டும் மீண்டும்
அகதிகளாக்கி
அக்கினிக்காளாக்காதீர்கள்!'

என்று, 'சிங்கள நண்பர்களுக்கு' உருக்கமான வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளார், படித்ததும் விட்டெறியாமல் பாதுகாக்கக் கூடிய கவிதைத் தொகுதி.

★

— ஏகலைவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேருக்கு நேர்

எழுத்தாளர் டானியலுடன் ஒரு மாலைப்பொழுது...

— பூமணிமைந்தன்

● தொழில் வாய்ப்புகளும், வேலைப் பளுக்களும் நிரம்ப உள்ளபோதும் தாங்கள் எழுத்துலகில் பிரவேசித்ததற்கான காரணம்?

○ இதற்கான காரணத்தை நான் தேடிப் பிடிக்க முயற்சிக்கவில்லை. ஒழிவு மறைவின்றிக் கூறுவதானால் எனது காதலி ஆனவளுக்கு மனதைத் திறந்து காட்டுவதற்காகவே எழுதத்தொடங்கினேன் என்று சில வார்த்தைகளில் கூறிவிடலாம். இதில் வெட்கம் என்ன இருக்கிறது? நான் ஒருத்தியைக் காதலித்தேன். அவள் என்னை ஏமாற்றிவிட்டாள். அதனாலேயே ''சோதனையின் கொடுமை அல்லது பழிக்குப்பழி'' என்ற முதலாவது சிறுகதை பிறந்தது.

● எழுத்துலக ஆரம்பம் அப்படி இருந்த போதிலும் உங்களால் எழுதப்பட்ட நாவல், சிறுகதைகளைப் படிக்கும்போது ஆழமான கருப்பொருளைக் கொண்டனவாகக் காணமுடிகிறதே... அது எப்படி?

○ ஏறக்குறைய இருபத்திரெண்டு, இருபத்து மூன்றாவது வயதுக் காலகட்டத்தில் அரசியலில் கால் வைத்தேன். என்னை ஆகர்சித்த அரசியலுக்காக மக்களுடைய பிரச்சனைகளுடன் கலக்கவேண்டியதாயிற்று. அதனால் பெற்றுக்கொண்ட அனுபவங்களை அப்போதைக்கப்போது வெளிக்கொண்டு வருவதற்காக எழுத்தைப் பயன்படுத்தினேன். என்னால் எழுதப்பட்ட ஒவ்வொரு படைப்புக்குமான கருப்பொருள், பேச்சு மொழி, களம், சம்பவத் தொடர்புகள் சகலதையும் மக்கள் மத்தியிலிருந்தே பெற்றுக்கொள்வதனால் படைப்புகள் கனதி பெறுவது இயல்பாயிற்று.

● இதுவரை நீங்கள் எழுதியுள்ள நாவல் களைப்பற்றிக் கொஞ்சம் சொல்வீர்களா?

○ முதலில் 'வீரகேசரி' தின இதழில் ''நெடுந்தூரம்'' என்ற தொடர் நாவலை எழுதினேன். அதை விமர்சித்து எழுதியவர்கள் 'டானியலுக்கும் நாவலுக்கும் நெடுந்தூரம்' எனக் குறிப்பிட்டார்கள். நான் சோர்வடையவில்லை; 'பஞ்சமர்' நாவலின் முதற்பாகத்தை எழுதினேன். அதில் இடம் பெற்ற சம்பவங்களில் நானும் பங்கு கொண்டமையாலே அதனைப் படைப்பதில் வெற்றியும் கிடைத்தது. அந்த உற்சாகத்துடன் 'போராளிகள் காத்திருக்கின்றனர்' நாவலை எழுதினேன். அதற்கு யாழ்ப்பாணக் கடற்பிரதேசத்து மக்கள் தந்த வரவேற்பு 'பஞ்சமரி'ன் மறு பாகத்தையும் எழுதத் தூண்டியது. 'கோவிந்தன்' நாவலை எழுதினேன். அதற்கு இரட்டிப்பு வரவேற்பு கிடைத்தது. அந்த உற்சாகத்துடன் ''அடிமைகள்'', ''கானல்'' ஆகிய நாவல்களையும் எழுதிமுடித்து பதிப்பிக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தவேளை 'ஈழநாடு' வார இதழ் கேட்டுக்கொண்டதற்காக 'மையக்குறி' நாவலையும், 'தினகரன்' வார இதழுக்காக 'முருங்கையிலைக் கஞ்சி' யையும் எழுதிக்கொடுத்தேன். இப்பொழுது வெளிவந்துகொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● இலக்கியம் மக்கள் மத்தியில் எப்படிப் பட்ட பாதிப்பை ஏற்படுத்தவேண்டுமென விரும்புகிறீர்கள் ?

○ வஞ்சிக்கப்பட்ட சகல மக்களும் தங்கள் பலத்தை உணர்ந்து, தன்நம்பிக்கையுடன் எழுந்து நின்று இன்றைய நடைமுறைச் சமூக அமைப்பை உடைத்தெறியும் துணிவினை ஏற்படுத்துவதாகவும்; சகல சீரழிவுகளுக்கும் காரணமான சமூகத்தை மாற்ற முற்படும் பெரும் சக்தியாம் மக்கள் சக்திக்கு உறுதுணை புரியும் பாதிப்பை வருவிப்பதாகவும் இருக்கவேண்டும்.

● சமுதாய மாற்றத்தை பேனு முனையால் ஏற்படுத்திவிடலாம் என்று சொல்லப்படுவதுபற்றி...?

○ இது மிகவும் பிழையான ஒரு கருத்தாகும். சமுதாயத்தை மாற்றும் பிற சக்திகளுக்கு பேனு ஒத்தாசையாக இருக்கமுடியுமே தவிர தனித்து அதனுல் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியவே முடியாது.

● உங்களுடைய படைப்புகளில் வழக்கொழிந்துபோன சொற்களும், அருகிவரும் சொற்களும் இடம்பெறுகின்றனவே! இவற்றை எப்படித் தேடிக்கொள்கிறீர்கள்?

○ அதற்காக நான் ஒன்றும் சிரமப்படுவதில்லை. கிராமப்புற வயதானவர்களைச் சந்தித்து அவர்களின் வாயிலாக அனுபவங்களைக் கேட்கும்போது சொற்கள் தாஞகவே கிடைத்துவிடுகின்றன. நீங்கள் நினைப்பதுபோல் அவை வழக்கொழிந்து போகவில்லை. அவைகள் கிராமப்புறங்களில் இன்றும் வாழ்கின்றன. இப்போதாவது ஆவணமாக்காவிட்டால் காலக் கிரமத்தில் அவை அழிந்தும்போகலாம்.

● தமிழர் பிரச்சனையை விட்டு, சாதியை வைத்துத்தான் உங்களால் இலக்கியம் செய்யமுடியும் என்று பொதுவில் பேசப்படுகிறது. இதுபற்றி . . .

○ சாதியைத் தொடாமல் என்னுல் சிருட்டிக்கப்பட்டவைகளை சரியாக இவர்கள் படிக்கவில்லை என்றுதான் அர்த்தம். அத்தகைய ''போராளிகள் காத்திருக்கின்றனர்'' என்ற நாவலைப் படிக்கக் கிடைக்காதவர்கள் இப்பொழுது 'தினகரன்' வார இதழில் வெளிவந்துகொண்டிருக்கும் ''முருங்கையிலைக் கஞ்சி'' என்னும் யாழ்ப்பாண விவசாய மண்ணின் கதையைப் படித்துப்பார்க்கட்டும். இவர்கள் சொல்வதுபோல, நான் எழுதும் சாதியை, தமிழர் பிரச்சனை என்று ஒப்புக்கொள்வதற்கு ஏன் மறுக்கின்றனர்? எதை இழந்தாலும் சாதிக் கௌரவத்தை இழக்கமுடியாதிருக்கும் தமிழர் வாழ்க்கையை இவர்கள் தமிழர் பிரச்சனையாகக் கருதவில்லையா? தெரிந்துகொண்டுதான் என்மீது பழி சுமத்துகிருர்கள் என்ருல் அது பெரும் அயோக்கியத்தனமாகும். மனதார இவர்கள் இந்த அயோக்கியத்தனத்தை விடும் வரை யாருமே தமிழர்களின் சரியான பிரச்சனைகளை உணர்ந்தவர்களாகமாட்டார்கள்.

● உங்களுடைய இலக்கிய நோக்கங்கள் என்ருவது நிறைவேறும் என்று நம்புகிறீர்களா ?

○ அந்த நம்பிக்கையை இழந்துவிடும் அளவுக்கு என் சிந்தனைகள் இன்னும் வக்கரித்துவிடவில்லை. ''இது நிறைவேற முடியாதது'' என்று நானே சொல்வேஞகில் எனது மூளையில் பழுது ஏற்பட்டுவிட்டதாக நீங்கள் நம்பலாம். மனித வரலாறு ஒரு தொடர்ச்சியான போர். அதற்கு இலக்கியமும் விதிவிலக்கானதல்ல. நான் இல்லாவிட்டால் எனக்குப்பின் இன்னெருவன்; அவனுக்குப்பின் வேருெருவன் இப்படியே உலகின் சுகபோகங்களைத் தனித்தனியே தன்னது, தன்னது ஆக்கிக்கொண்டிருக்கும் வர்க்கத்தை அழித்தொழித்து எல்லாம் எல்லாருக்கும் என்ற எல்லைவரை இந்தப் போரை நடத்தி வெற்றிபெறுவர் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அந்நாள் இப்பொழுதே என் கண்களுக்கும் தெரிகின்றது.

● உங்கள் படைப்புகளில் தாழ்த்தப்பட்ட பாத்திரங்களாக வரும் செல்லனின் மனைவி 'செல்லி'யாகவும் எல்லிப்போலையின் மனைவி 'இத்தினி'யாகவும் காரணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ப்பொருத்தம் பெறுவதற்கான ஞாயங்கள் என்ன?

○ கிராமப்புறத்தில் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவனுக்கு 'மாதன்' என்று பெயர் இருந்தால் அவர்களைக் குடிமைகளாக வைத்திருப்பவர்கள் அவனது மனைவியை 'மாதன் பெண்டில்' என்றழைக்கத் தொடங்கி கடைசியில் 'மாதி' ஆக்கி விடுகின்றனர். நாளடைவில் அதுவே அவளின் இயற் பெயராகியும் விடுகிறது. இது போலவே செல்லனின் மனைவி 'செல்லி' யாகவும், எல்லிப்போலையின் மனைவி 'இத்தினி' என்றும் ஆகின்றனர். இது இன்றுவரை யாழ்ப்பாணக் கிராம மண்ணுடன் ஒட்டிப்போயே இருக்கிறது. அந்த மண்ணின் வாசனை வெளிப்படுகிறதே அன்றி வேறல்ல.

● நீங்கள் இலக்கண நூல்கள் ஒன்றையும் தொட்டுக்கூடப் பார்த்ததில்லை என்கிறீர்களே இதுபற்றி . . .

○ எனது மாணவ காலத்தில் 5ம் வகுப்புக்கு இலக்கண நூல் வரவில்லை; அதுவரை வகுப்பாசிரியர் பேசிய வார்த்தைகள்தான் இலக்கணப் பாடமாகும். வாழ்க்கையில் பின்தள்ளப்பட்ட மக்கள் பேசுவதைப் புரிந்துகொள்வதற்கும் அவர்கள் பேசும் விதத்திலேயே விசயங்களை இலகுபடுத்திக் கூறுவதற்கும், எழுதுவதற்கும் எனக்கு இலக்கணம் தெரியும். இலக்கணம் என்பது மனித ஜீவன் உதயமான பின்னர் வந்த ஒன்றே தவிர அதற்கு முற்பட்டதல்ல. அதனால் மனிதன் எப்படிப் பிறந்தான், எப்படி இருக்கிறான், எப்படி வாழவேண்டும் என்பதற்குப் பின்தான் இலக்கணம் என்ற ஒன்று இருக்கமுடியும்.

● எழுத்தாளர்களை எந்தெந்த அளவுகோல்களால் வரிசைப்படுத்துகிறீர்கள்?

○ பழைய சமூகப் பழக்கவழக்கங்களுக்கும்; அந்த அமைப்புகளுக்கும் உட்பட்டு எழுதுபவர்கள். அந்தக் கட்டுக்கோப்புகளைக் கடந்து எழுதுபவர்கள். அக்கட்டுக்கோப்புகள், வரம்புகள் சகலதையும் அழித்துப் புதிய ஒரு சமூகக் கட்டுக்கோப்பை உருவாக்க எழுதுபவர்கள் என்ற வரிசைகளில் . . .!

● குறிப்பிடத்தக்க சிறுகதையாளராக விளங்கிய நீங்கள் எழுபதுகளில்தான் நாவலாசிரியராகப் பரிணமித்தீர்கள்; இந்த இரண்டு இலக்கிய வடிவங்களிலும், சமூகத்திற்கு தங்களால் சொல்ல நினைக்கும் விடயத்தை இலகுவாகப் பதிய வைப்பதற்கு உகந்ததென்று எதனைக் கருதுகிறீர்கள்?

○ குறிப்பிடக்கூடிய — ஆணி அடித்தாற் போன்று பட்டென்று புரியக்கூடியதான கருப்பொருளைச் சிறுகதைக்கூடாகவும்; ஒரு விசயத்தை விஸ்தாரமாக்கி, அதனோடு இணைவுள்ள உபவிசயங்களையும் விளக்கிக் கூறவேண்டும் என்ற அவசியம் ஏற்படும் பட்சத்தில் அதை நாவலுக்கூடாகவும் கொண்டுவருகிறேன். இவை இரண்டில் எதை முதன்மைப் படுத்துவதென்ற கேள்விக்கு இடமே இல்லை. இலக்கியத்தின் இலக்கில் இரட்டைத்தன்மை இருக்கும் போதுதான் வடிவங்களை ஆளுமைப்படுத்துவதிலும் வெவ்வேறு மச்சோரம் ஏற்படுமே தவிர மற்றப்படி அப்படி ஏற்பட நியாயம் இல்லை.

● உங்களை இலக்கியக்காரனாக உருவாக்குவதற்கு யார் யார் உறுதுணையாக நின்றனர் என்பதை குறிப்பிடுவீர்களா?

○ யாரையும் யாரும் உருவாக்குவதில்லை என்பது எனது கருத்து. அந்தந்தக் காலத்தின் தேவைகள்தான் எதையும் உருவாக்குகின்றன. அதற்கு இலக்கியக்காரனும் உட்பட்டவனே! 'நான் அவனை உருவாக்கினேன்' என்பதெல்லாம் அகம்பாவத்தின் வெளிப்பாடே! நான் எழுத்துலகில் பிரவேசித்த காலத்தில் எனது எழுத்துக்களைத் திருத்தங்கள் செய்தும் அச்சுவாகனம் ஏறுவதற்கான ஒத்தாசைகள் புரிந்தவர்கள் திருவாளர்கள் எஸ். பொன்னுத்துரை, என். கே. ரகுநாதன் ஆகியோர். இதைச் சொல்வதில் வெட்கப்பட என்ன இருக்கிறது?

● எஸ். பொ. வின் இலக்கிய ஆழுமையைப் பற்றிய உங்கள் கருத்து?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ ஆழுமை என்ற வரையில் எஸ். பொ. மிகவும் உன்னதமானவர். ஆனல் அது மட்டும் ஒரு சிருஷ்டி கர்த்தாவுக்குப் போதுமானதல்ல. எப்போது – எதற்காக ஆழுமையைப் பயன்படுத்துவதென்பதில்தான் ஆழுமையின் பரிபூரண வெற்றி தங்கி இருக்கிறது. மழை எல்லாராலும் வேண்டப்படுவதொன்று. அம்மழை கடலில் பெய்யுமானல் அதனல் யாருக்குப் பயன் கிடைக்கப்போகிறது? மனித இனத்தின் முதன்மையான தேவைகளை மையப்படுத்தாமல் பிறப்பெடுக்கும் கருவூலங்களை வெறும் ஆழுமையால் மட்டும் மேன்மைப்படுத்த நினைப்பது சரியானதென்று நான் கருதவில்லை.

● இலக்கியத்தில் பாலியல் பற்றி உங்கள் அபிப்பிராயம்?

○ இலக்கியத்தில் பாலியல் கூடாதென்று கொள்ளலாகாது. அப்படி எழுதக்கூடாதெனக் கட்டளை இடுவது வேறோர் வகையில் 'உயிருள்ள எதைப்பற்றியும் எழுதாதே!' என்று கூறுவதற்கே ஒப்பானதாகும். மனித வாழ்க்கை முழுவதும் பாலியல் மயமானதோ, அன்றி அதிலே தங்கி நிற்பதோ அல்ல. அதேபோன்று இலக்கியம் பாலியலை முதன்மைப்படுத்தும் விதத்திலோ அன்றி அதில் தங்கிநிற்கும் முறையிலோ அமைவது இயல்புக்கு மாறுனதும், தேவைகளுக்குப் புறம்பானதுமாகும். சந்தர்ப்பத்தால் பாலியல் வியாபாரத்தை நடத்தும் ஒருவள், முழுமனித சமூகத்துக்கும் எதிரியான ஒருவனை அல்லது ஒரு வர்க்கத்தை அழிக்க பாலியலையே ஆயுதமாக உபயோகித்து செயல்படுவதாக சிருஷ்டி அமையுமெனில் அக்கருவூலத்தை எவரும் 'பாலியல்' என்பதற்குள் அடக்கி விடமுடியாது.

● இறுதியாக ஒரு கேள்வி எதுவும் விளங்கிக் கொள்ளமுடியாதவாறு எழுதுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

○ ஆதியும் அந்தமுமில்லாத – தொட்டோ உணர்ந்தோ கொள்ளமுடியாத 'கடவுள்' என்ற ஒரே ஒரு வாசகனுக்காக மட்டும் எழுதுபவர்கள் என்றுதான் கூறுவேன்.

● இதுவரை 'தாரகை' வாசகர்கள் சார்பாகவும், ஏனைய இலக்கிய நெஞ்சங்களுக்காகவும் நான் தொடுத்த கேள்விகளுக்கு பொறுமையுடன் மிகவும் அருமையான பதில்களைத் தந்துதவினீர்கள் அதற்காக அவர்கள் சார்பில் வணக்கத்தையும்; நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

○ அதுபோலவே என்னிடம் இருந்து இந்தப் பேட்டியை எடுத்து வெளியிடும் 'தாரகை' வெளியீட்டாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி உடையதாகும். □

● பத்திரிகைத் தாளின் விலையேற்றத்தினல் ''தாரகை''யின் விலையையும் சற்று அதிகரிக்கவேண்டியிருக்கிறது. எமது வாசகர்கள் இதனைப் பொருட்படுத்தாது தமது ஆதரவைத் தொடர்ந்து நல்குவார்களெனும் நம்பிக்கையுடன் முன்னேறுகிறோம்.

● இனிவரும் காலங்களில் இரு மாதங்களுக்கொருதடவை, முதல் மாதத்தின் பிற்பகுதியில் ''தாரகை'' தொடர்ச்சியாக வெளிவரும்.

● ''தாரகை''யின் அடுத்த இதழ் செ. கதிர்காமநாதன் நினைவுச் சிறப்பிதழாகவும், 14-வது இதழ் கிழக்கிலங்கைச் சிறப்பிதழாகவும் வெளிவரும். இதழைச் சிறப்பிக்கவேண்டியது உங்கள் கடமை.

● இந்த இதழில் இடம்பெறவிருந்த சில விஷயங்களைப் பிரசுரிக்கமுடியாமல் போனதற்காக, சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களிடம் மன்னிப்புக் கோருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்தறிவு

— விஷ்ணுநாதன் —

''மணீ ..! எழும்பு மவனே, விடிஞ்சு மதியம் ஆயிடிச்சு இன்னுமா தூக்கம்.,. ஹொஸ்பிட்டலுக்கும் போகணுமில்லையா? எழும்பு ராசா எழும்பி இந்தத் தேயிலையைக் குடி''

மாரியம்மா மீண்டும் மணியத்தை மெதுவாக உலுப்பினள்.

ம்க்ம்... அவன் அருளுவதாகக் காணேம்.

''சும்மா தொணதொணத்துக்கிட்டு... அங்கிட்டுத் தேயிலையை வைச்சிட்டுச் சும்மா போங்க ஆத்தா...''

மணியம் முணுமுணுத்துக் கொண்டே விலகியிருந்த போர்வையை இழுத்துத் தலையிலிருந்து கால்வரை மூடிக்கொண்டான்.

''சூ. என்ன குளிரப்பா இது...!'' போர்வையையும் மீறி உடலை நடுக்கமெடுக்க வைக்கின்ற இந்தக் குளிரைப் பார்க்கையில் அங்கே தோட்டத்தில் 'காம்பராவில்' இருப்பது போன்ற உணர்வுதான் அவனுக்கு ஏற்படுகிறது. யாழ்ப்பாணம் என்ருல் ஒரே 'வெப்பம்' என்றுதான் அவன் கேள்விப்பட்டிருக்கிருன். ஆனல் இங்கு இப்படி எதிர்மாருக 'சில்' என்று குளிர்வீசும் காலைப் பொழுதுகளும் இருக்கின்றன என்பதை பார்க்கும்போது அதிசயமாகத்தானிருக்கிறது. அவன் இங்கு வந்த ஐந்தாறு மாதங்களில் மழையையுங் குளிரையுந்தான் சந்தித்திருக்கிருன். இன்னும் 'சூடான' காலநிலையை அனுபவிக்க வாய்புக் கிட்டவில்லை.

''மார்கழி தை மாசங்களெண்டால் உப்புடித்தான் தம்பி சரியான பனி. எண்டாலும் இம்முறை எக்கச்சக்கந்தான். மழையுங் கிடகிடவெண்டு கிடந்திட்டு இப்பதானே பெய்யுது.''

நேற்று மரக்கறி கொண்டுவந்த கிழவர் சொன்னது ஞாபகம் வந்தது.

இந்தக் குளிர் அசாதாரணமானதாயிருக்க வேண்டும்.

தூரத்தே புகையிரதமொன்று 'ஒப்பாரி' யிட்டுக்கொண்டு ஓடுவது கேட்கிறது.

''ஆத்தா சொன்னதுபோல ஆறுமணிக்கு மேலாயிருக்கணும்''

'ஏதோ' கடமை நினைவிற்கு வந்தவனுகப் போர்வையை விலக்கிக்கொண்டு வெளியில் வருகிருன்.

''ஊ... அப்பாடா...''

மாரியம்மா அடுப்பை ஊதிக்கொண்டிருக்கிருள். பக்கத்துப் பக்கத்துக் கூடாரங்கள் அருகேயும் கல்லடுப்புகள் புகைந்து கொண்டுதானிருந்தன. 'அகதிகள்' என்ற பெயரில் முகாமமைத்துக் குடியமர்த்தப்பட்டவர்கள் என்பதையே மறந்தவர்களாக இந்த வாழ்க்கைக்கு இயைவுபட்டு எதையெதையோ தங்களது கடமைகளாக எண்ணிச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர் 'அயலவர்கள்'. மிகப்பெரிய இழப்புகளால் வேதனையுற்று வெடித்துப் போயிருந்த இதயங்கள் இவ்வாருகச் சிறிதுசிறிதாக சாதாரணத்திற்கு வருவதை அவதானிக்கும் பொழுது மகிழ்ச்சிதான்.

''மணிமாமா... மணிமாமா... இந்தப் போலை உசரத்திக்கு... ஆகாசமட்டு உசரத்திக்கு வீசுங்களேன் மாமா...''

மழலையொன்று வந்து மணியத்தின் காலைப் பிடிக்கிறது.

அது அகிலா – பக்கத்துக் கூடாரத்தைச் சேர்ந்தது.

எங்கெங்கோ வேறுவேருன இடங்களிலிருந்து வந்துசேர்ந்த அவர்களிடையே இந்த ஐந்தாறு மாத கால இடையில் உறவுமுறைகள்கூட ஏற்பட்டுவிட்டன.

புதிய பரம்பரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மாரி மாமி... குங்குமப்பொட்டு அன்ரி... ஹப்புத்தளைப் பாட்டி.''

இந்த வகையில் அகிலாவிற்கு மணியம் மாமா' ஆகிவிட்டான். ஏதோ ஒருவகை இனந்தெரியாத பாசம் — பரிவு — இரக்கம். இந்தச் சில நாட்களிலேயே 'உறவு' மிகவும் இறுகிவிட்டது. அகிலாவும் 'மணிமாமா மணிமாமா' என்று இவனைச்சுற்றியே உயிரை விடுகிறது.

மணியம் வீசிய பந்து மேலே போய் மீண்டும் விழுகிறது.

'அச்சா... அச்சா' குழந்தை துள்ளிக் குதிக்கிறது. ''மாமா... இன்னொருக்கா மாமா''

''ம்... இண்ணைக்கு வெள்ளணத்தோடையே ஆரம்பிச்சாச்சு, நாளு பூரா இதுதான் வேலைபோலை''.

முணுமுணுத்துக்கொண்டு மீண்டும் எறிகிறுன்.

''அகிலாக் கண்ணு, மாமா இண்ணைக்கு கிளிநொச்சி ரவுணுக்குப் போகணும், போயி மருமவளுக்கு முட்டாசு, சாக்கிளேட்டு எல்லாம் வாங்கணும் அப்புறமா வந்து விளையாடுவம்... சரியா கண்ணு...''

ஒருமாதிரியாக அன்புத்தொல்லைகளிலிருந்து விடுபட்டுவிட்டான்.

அவன் எல்லாக் கடமைகளையும் முடித்துப் புறப்பட்டபோது ஏழு மணிக்கு மேலாகிவிட்டது. வைத்தியசாலையில் பார்வை நேரம் முடிந்திருக்கும். 'வோச்சர்' முன்னல் நின்று 'தலையைச் சொறிந்து. இரண்டை மூன்றை நீட்டித்தான்' உள்ளே செல்ல வேண்டியேற்படும்.

கணேசனின் அம்மாவிடம் சாப்பாட்டுப் பாசலைப் பெற்றுக்கொண்டால் போகவேண்டியதுதான்.

கணேசனின் அம்மா இப்பொழுதுதான் ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தாள்.

''அ... மணித? என்ட... என்ட... மம நக்கின்ட டிக்கக் பறக்குணு...''

['அ... மணியா? வாங்கோ. . வாங்கோ... நான் எழும்புவதற்குச் சிறிது தாமதித்து விட்டேன்']

''கமக் நாய்.'' ['பரவாயில்லை'] உள்ளே சென்று இருக்கிறுன். கணேசின் அம்மா அவசரமவசரமாக ஏதோ செய்துகொண்டிருக்கிறுர்.

எல்லோருடைய கூடாரமும்போல அதுவும் நீலத்துணியால்தான் அமைக்கப்பட்டிருந்தது. எனினும் ஏனையவற்றைவிட அது அழகாக இருந்தது. அது அமைந்த இடம் அதை வைத்திருக்கும் முறைகள் காரணமாயிருக்கலாம். மேலே புத்த பகவானின் மோனக்கோலப் படம் தொங்குகிறது. அதன் கீழே சிங்களத்தில் ஏதோ வாக்கியங்கள். கணேஸ்தான் எழுதியிருக்கவேண்டும்.

ஆம் — கணேசனின் குடும்பம் சிங்களக் கலாச்சாரங்களுக்கு உட்பட்ட ஒன்றுதான். தமிழ் அகதிகள் மத்தியில் அவர்களைக் காணும் போது எல்லோருக்குமே குழப்பந்தான்.

மணியமும் முதன்முதலாக மாத்தளையில் அகதிகள் முகாமில் வைத்துத்தான் கணேசனைச் சந்தித்தான். இனவெறி கனன்று கொண்டிருந்த வேளை முகாமில் எத்தனையோ பயங்கர அனுபவங்களை, சோகமான சம்பவங்களைச் சந்தித்து வேதனையுற்றிருந்த பலரையும் ஆறுதற்படுத்துகின்ற பணியில் மணியம் ஈடுபட்டிருந்தான். அவனுக்கோ அவனது குடும்பத்திற்கோ அப்படியொன்றும் 'பெரிதாக' ஏற்படவில்லை என்பதால் அவனுக்கு அது சாத்தியமாயுமிருந்தது.

அந்த வகையில்தான் கணேசனுடனும் பழக்கமேற்பட்டது. கண்கள் கலங்கி, முகம் வெளிறி — பார்க்கும்போதே ஏதோ நிறையவே இன்னல்களைச் சந்தித்திருக்கிறுன் என்பதைப் பிரதிபலிக்கும் கோலத்தில் அவனிருந்தான்.

இவன் கதைக்கக்கூட இயலாத நிலையில் மிகவும் உடைந்துபோயிருப்பதாகத்தான் மணியம் ஊகித்தான்.

''பிறதர்... நடந்தது நடந்திடிச்சு, அதையே நெனைச்சுக் கண்ணீர் விடுறதிலை ஒண்ணுமேயில்லை''

மணியத்தை அவன் ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

''மட்ட வடிய தெமிழ தன்ன நாய்'' [எனக்கு அவ்வளவாகத் தமிழ் தெரியாது']

மணியத்திற்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய் விட்டது.

இவன் எப்படி இங்கிட்டு வந்தான்?''

''ஒயா சிங்கள எக்கனய் த?'' [நீங்கள் சிங்கள ஆளா?]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை அசைத்தான். கணேசின் கதை கேட்ட போது அவனறிந்துகொண்ட விதவிதமான கண்ணீர்க் கதைகளுள் அது முற்றிலும் வேறு பட்டதாயிருந்தது.

●

கணேஸ் குடும்பம் மாத்தளைப் பகுதியிலுள்ள ஒரு கிராமத்தில் சிறிது வசதியான ஒன்று. அவர்களுக்குச் சொந்தமாக ஒரு பல சரக்குக் கடையுமிருந்தது.

அப்பா — யாழ்ப்பாணத்தவர் — தமிழர். வியாபாரத்திற்காக வந்த இடத்தில் கண்டிப் பகுதியில் சிங்களப் பெண்ணான கணேசின் அம்மாவுடன் தொடர்பு ஏற்பட்டது. வாழ்க்கைத் துணைவியாக்க வேண்டியும் ஏற்பட்டு விட்டது. அவர்களது 'துருவச் சங்கமிப்பை' இருபக்கத்திலும் விரும்பவில்லை. எதிர்ப்புகள் ஏற்பட்டதால் அவர்களைவிட்டு விலகி மாத்தளைக்கு வந்து குடியேறி சிறிதுசிறிதாகத் தன்னை வலுப்படுத்திக்கொண்டார். அயலவர்களுடன் அவ்வளவாக நெருங்கியிருக்காவிடினும் பிரச்சனைகளின்றியிருந்தனர்.

கணேஸ் — ஏகபுத்திரன். செல்லமாகவே வளர்ந்தான். படித்தது பேசியது பழகியது எல்லாம் அவன் 'தாய்' மொழியில்தான். அவன் பெயரளவில்தான் 'கணேசாக' இருந்தான். தவிர, தமிழுக்கும் அவனுக்குமிடையே அவ்வளவாகச் சம்மந்தமில்லை.

மிக மகிழ்ச்சியாகத்தான் அவர்களின் காலங்கடந்தது. இதற்குமுன் ஏற்பட்ட இனக் கலவரங்களால் இதுவரையில் எதுவித தொல்லைகளுமேற்பட்டதில்லை.

எண்பத்திமூன்று யூலை 26 —

நாட்டடங்கிலும் இனக்கலவரம் மூண்டு மக்களின் நிம்மதி, உடமை, உயிர் என எல்லாவற்றையும் பொசுக்கிக்கொண்டிருந்தது. பல்வேறு பகுதிகளிலும் பதட்டநிலை இருந்தது. எனினும் கணேசின் கிராமத்தில் அன்றுவரை எதுவுமே நடக்கவில்லை. அங்கு பிரச்சனைகள் ஏற்பட அது 'கலவன்' கிராமமாயுமிருக்கவில்லைத்தானே?

கணேசின் அப்பா வழமைபோலக் கடையைத் திறந்து வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவர்களின் வீடும் கடையின் பின் பகுதியில்தான். கணேஸ் அன்று பாடசாலைக்குச் செல்லவில்லை, ஏதோ வாசித்துக்கொண்டிருந்தான்.

திடீரென கடையில் புதிய குரல்கள் - வித்தியாசமான சத்தங்கள் கேட்கின்றன. கணேஸ் ஓடிவந்து பார்க்கிறான். கடையின் உள்ளே, வெளியே இருபத்தைந்து பேர்வரையிருக்கும் - தோற்றம் காடையர் போலத்தானிருந்தது; காக்கி உடைப் பேர்வழிகள் சிலருமிருந்தனர் - கடையிலிருந்து சாமான்களை வெளியே வீசிக் கொண்டிருந்தனர். 'அப்பா' அங்குமிங்கும் ஓடுவதும் அதையிதைத் தடுப்பதும் கையெடுத்துக் கும்பிடுவதுமாகத் தடுமாறிக் கொண்டிருந்தார். வந்தவர்களின் வாயிலிருந்து ''கொட்டியா, ஈழம்... குட்டிமணி'' என வார்த்தைகள் சிதறிக்கொண்டிருந்தன.

கணேசனுக்கு ஒரே திகைப்பாயிருந்தது.

என்ன நடக்கிறது...?

''ஐயோ... முருகா...'' கொஞ்சமும் எதிர் பார்க்காத வேளையில் அப்பாவின் அலறல் அவனை திடுக்குற வைக்கிறது. திரும்பிப் பார்க்கிறான்.

அங்கே —

கழுத்திலிருந்து இரத்தம் பீறிடும் நிலையில் அப்பா தரையில் விழுகிறார். ஒரு கொடியவன் ஏதோ பெரிய சாதனையைப் புரிந்துவிட்ட திருப்தியில் எக்காளமிடுகிறான். அவனது கையில் கத்தி.

''அனே... தாத்தா'' ['ஐயோ அப்பா']

அதற்கிடையில் அவனது தாயும் வந்து விடுகிறார். ஒருவன் ஓடிவந்து கணேசைப் பிடிக்கிறான். கணேசுக்கு வேதனையையும் மீறி பயங்கர உணர்வுதான் ஏற்படுகிறது.

அவன் இவனை உலுப்பியவாறே கத்துகிறான்.

''. . . . . .'' ['ஏ பாதிப்புலியே! உனது அம்மாவையும் அழைத்துக்கொண்டு எங்காவது ஓடித்தப்பிவிடு, உன்னில் சிறிதளவாவது சிங்கள இரத்தம் ஓடுவதால்தான் உன்னை உயிரோடு விடுகின்றோம், தப்பிப்போ']

தந்தையை இழந்த வேதனையையும் மறந்து தங்களது உயிரைப் பறிகொடுக்கவேண்டியுள்ள பயங்கர நிலையிலிருந்து விடுபட அம்மாவையும் இழுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தான். எங்கே ஓடுவது?

நாக்கில் நஞ்சு ஊறுகின்ற 'இரண்டாந்தர' அரசியல்வாதிகளின் சுயநல வார்த்தைப் பிரயோகங்கள், வழிகாட்டலால் ஒன்றுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாத அப்பாவிகள் 'இனத்தைக் காரணங் காட்டி விரட்டப்பட்டு அகதிகளாகி ஒதுங்க— இன்றுவரைத் தம்மைப் பெரும்பான்மை இனத் தவரென்று நம்பியிருந்த இவர்களும் அவர் களுடன் இணைகின்றனர், அகதிகள் மூகாமில்.

●

மணியம் ஒருவாறு காவலாளியை 'மசிய' வைத்து வைத்தியசாலையில் நுழைந்துவிட் டான்.

''ஆ... ஹலோ மணி, எண்ட...எண்ட'' ['ஆ... மணி வாங்கோ வாங்கோ']

தலையில் கட்டுப்போட்டவாறு தலைய ணையை 'முண்டு' கொடுத்துச் சாய்ந்திருக் கின்ற கணேசைப் பார்க்கையில் பரிதாபமாகத் தானிருக்கிறது.

''தன் ஹோ மத'' [இப்போது எப்படி?]

அவனது தலையைத் தொட்டுப்பார்த்தான் மணியம். சில மாதங்களாயினும் நெருக்கமா கப் பழகிய நண்பர்கள் அல்லவா?

''ம்... ஹொந்தாய்... ஹொந்தாய் .. ஏக்க காதல் பருசு நேத?'' ['ம்... நல்லது... நல்லது... அது காதல் பரிசு அல்லவா?] அவன் சிரிக் கிறான்.

கணேசின் தாயார் தந்த சாப்பாட்டுப் பார்சலை மணியம் நீட்டியபோது அவன் அதை வாங்குவதில் ஆர்வப்படுவதாகத் தெரியவில்லை. அதற்குமேல் எதையோ எதிர்பார்ப்பது மணி யத்திற்கு விளங்குகிறது.

''.......'' [ம்... கவலைப்படவேண்டாம் வசந்தா கடிதம் தந்திருக்கிருள்''] என்றவாறு ஒரு 'என்வலப்பை' எடுத்து நீட்டினன். கணேஸ் அதை வாங்கிப் பிரித்து உள்ளிருந்த கடிதத்தை மேலுங்கீழும் பார்த்துவிட்டு மணி யத்தை ஒருவகை உணர்வு பிரதிபலிக்க நோக்கு கிறான். அந்தக் கடிதம் தமிழிலிருக்கிறது. அதை அவனல் வாசித்துவிளங்க இயலாதென்று மணிக்குத் தெரியும். வாசித்து மொழிபெயர்க்க வேண்டியது அவனது கடமைதான். செயற் படுத்த ஆரம்பிக்கிறான்.

வசந்தா பதுளைப் பகுதியைச் சேர்ந்தவள். இவர்கள் போலவே கலவரத்தில் விரட்டப் பட்டு 'அகதி' பட்டியலுள் சேர்ந்தவள். முகா மிற்கு வந்தபின்பு கணேஸ் — வசந்தா இரு வருமே தங்கள் இதயங்களைப் பரிமாறிக்கொண் டனர். மணியத்துக்கு ஆரம்பத்திலேயே இதை யிட்டு கணேஸ் தெரியப்படுத்திவிட்டான். அறிந்துகொண்ட அன்றிலிருந்தே அவர்களின் அன்பு இறுக மணியம் இயலுமான உதவிகளைச் செய்தான். அந்த வகையில்தான் இன்றும் 'பியோனுகி' கடிதம் வாசித்துக்கொண்டிருக் கிறான்.

மொழிபெயர்ப்புத் தொடர்கிறது.

''...நீங்கள் எனக்காகத்தானே அடி வாங் கிக் காயப்படவேண்டி ஏற்பட்டது. என்மீது அன்புகாட்ட முற்பட்டு நீங்கள் வேதனைப் படுகிறீர்கள்.

கணேஸ்! பார்த்தீர்களா உங்களைவந்து பார்க்கக்கூட முடியாதவளாகிவிட்டேன். குறைப்படவேண்டாம். மாமாவுக்குத் தெரியா மல் வர இயலவில்லை. எப்படியோ நீங்கள் குணமாகி ஓடோடி வரப்போகிறீர்கள்... அதன் பிறகு நாங்கள் இருவரும் எங்காவது ஓடிச் சென்று மகிழ்ச்சியாக வாழப்போகின்றோம்... கடிதம் நீள்கிறது.

கணேஸ் மிக ஆர்வத்துடன் — சூழலை மறந்தவனக அதை அவதானிப்பதில் லயித்து விட்டான்.

வாசித்து முடிந்தது.

'தாரகை' - புதிய சந்தா

ஒரு வருடம்
ரூபா 20/- மட்டும்.

ஏற்கனவே வருட சந்தா கட்டியவர்களுக்கு இதனடிப்படையில் சந்தாக்காலம் நீடிக்கப்படும்.

'தாரகை'யின் வரவு தொடர, உங்கள் ஆதரவும் பெருகவேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர், ''தாரகை''
இல. 21/4, பாத்திமாகிரி வீதி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேஸ் விழிகளோரத்தில் கசிந்த நீரைத் துடைத்துக்கொண்டே கண்களை மூடியவாறே ஏதோ யோசிக்கிறான்.

''மச்சான் மம.......'' [மச்சான், நான் கேள்வியொன்று கேட்கிறேன். பதில் சொல்லுவாயா?']

மணியத்துக்கு என்ன கேட்கப்போகிறான் என்பது விளங்கவில்லை.

சில விநாடிகள் மௌனம்.

''......'' ['நான் தமிழனா? சிங்களவனா?']

இவன் என்ன கேட்கிறான்?

அவனது கேள்வி விசர்த்தனமாயிருப்பது போலப் பட்டாலும் அதில் அர்த்தம் நிறையவே இருப்பதாக மணியத்துக்குப் படுகிறது.

கணேஸ் — வசந்தா காதல் தொடர்புகள் அம்பலமான அன்று வசந்தாவின் மாமா கொதித்தெழுந்தது மோசமாகப் பேசியது; கணேஸ் உணர்ச்சிவசப்பட்டு ஏதோ எதிர்த்துக் கதைத்தது, வசந்தாவின் மாமா ஆத்திரப்பட்டு அடித்தது... எல்லாமே மணியத்தின் சிந்தனையில் வந்தன.

''இவன் ஒரு தமிழனாயிருந்திட்டா நான் ஒண்ணுமே கதைச்சிருக்கமாட்டேன். வசந்தாவைக் கண்ணாலம் பண்ணியும் குடுத்திருப்பேன். இவன் சீனா இவனுகளோடை உறவு நமக்குத் தேவையில்லை...''

தமிழினத்தவன் எனக் காரணங்காட்டி அவன் பிறந்த இடத்திலிருந்து விரட்டப்பட்டான். அவனது உறவு, உடமைகள் பறிக்கப்பட்டன. சிங்கள இனத்தவனென்ற காரணத்தால் அவனது வாழ்க்கைத் துணைவி மறுக்கப்படுகிறாள்.

அப்படியென்றால் அவன் உண்மையிலேயே யார்?

அந்தக் கேள்வி கேட்டதன்பின்பு கணேசை விட்டுச் செல்லும்வரை மணியரால் எதுவுமே பேசமுடியவில்லை.

அவனது 'பகுத்தறிவு'க்கு கணேசின் வினாவுக்கான விடை கிட்டவேயில்லை. □

● அஞ்சலி

○ கவிதை!

பொன்மனத்தின் வாசலிலே
போட்டுவைத்த எழிற்கோலம்!
புழுதியிலே வாழ்பவரின்
பொங்குகின்ற பெருமூச்சு!
எண்ணமதின் மின்கிழிப்பு,
எழுச்சிகளின் வார்ப்படங்கள்
இதயத்தின் வேதனைகள்
எரிந்துவரும் தீச்சுடர்கள்!

வான்முகட்டில் ஒளிஉமிழும்
வைரமணித் தாரகையாய்,
வார்த்தையுணர் வோடுவரும்
வரிகளிடைப் பெருங்கனவை
ஊன்குழைத்த ஓசையிலே
உதிர்த்தமணிப் பூச்சரங்கள்
உரையாடும் உயர்கவிதை
உள்ளத்தின் ஓவியங்கள்!

— கவிஞர் ஈழவாணன்
(அக்கினிப் பூக்களில்)

உள்ளே இருப்பது நெருப்பு

❋ தேவி பரமலிங்கம் ❋

மதியம் வெகுவாகப் பின்தள்ளப்பட்ட பொழுது. ஆரியகுளம் சந்தி மதவில், நாக விகாரை உள்ளிருந்து மதில்களுக்கும் அப்பால் கீழே சலசலத்து ஓடும் பெரிய வடிகாலுக்கும் மேலே பரந்து நிற்கும் அரசமரம் குடை பிடிக்க 'ஜில்'லென்று வீசி வரும் வாடைக்காற்றின் 'கதகத'ப்பை அனுபவித்தவராக துரையர் சாவதானமாகத் தெருப் புதினங்களில் லயித்து இருந்தார்.

“தம்பி... நீர் இவடந்தானே இருக்கிறே...”

நடுத்தர வயது. வாட்டசாட்டமான உடல் வாகு; வெள்ளை வேட்டி; மினுமினுப்பான அரைக்கை 'சேர்ட்'; 'பாக்கட்'டில் மூக்குக் கண்ணாடி இருந்தது. அகன்ற நெற்றியில் மூன்று விரல்களால் இட்ட திருநீற்று அடையாளம். இத்தியாதிகளுடன் சுந்தரம்பிள்ளை துரையரை நெருங்கி நின்றார்.

சற்று முன்னதாக துரையரைத் தாண்டி பலாலி 'றோட்'டால் வந்து ஸ்ரான்லி வீதி விகாரை முன்பாக ஓரத்தில் நிறுத்திய 'மொறிஸ் ஒக்ஸ்போர்ட்'டில் இருந்து இறங்கி வந்தவர் என்பதை மனதால் படம் போட்டுக் கொண்டே துரையர் சொன்னார்.

“ஓம் பாருங்க... ஏன்... என்ன விசயம் ..”

“ஒண்டுமில்ல... அந்த வாசியசாலை இருக்கெல்லே அதுக்கங்காலை மூண்டாவதாக இருக்கிற வீடு வளவு விக்கக் கிடக்கு...”

“ஓம் தெரியும் மணியத்தின்ர வீடு...”

“அதை வாங்கத்தான் போய்க் கதைச்சுப்போட்டு வாறன்... எப்படி அந்த அயல் ..”

“பிழையில்ல... நல்ல இடம்... சோலி சுறட்டுக்குப் போகாம தானும் தன்பாடுமாய் இருக்கிறவங்கதான் அந்தச் சுற்றாடல்ல இருக்கிறாங்கள்...”

“அதுக்காக இல்ல.. நானும் என்ரை வரலாற்றைச் சொல்ல வேணும்... அப்பான் உமக்கு விளங்கும்...” ஆலாவர்ணம் போட்டு சுந்தரம்பிள்ளையர் கதையைத் துரையருக்குச் சொல்லத்தொடங்கினார்.

சுந்தரம்பிள்ளையர் பிறந்த மண்ணை விட்டுப்போய் கொழும்போடு சகலதுமாக வாழத் தொடங்கி பதினைந்து, இருபது வருடங்கள் இருக்கும்.

யாழ்ப்பாணத்து உரும்பிராய் சாதி வேளாளர் குலத்தில் தோன்றிய அவர் பதினைந்தாவது வயதிலிருந்தே இடை சுகம் வந்து போவ

செ. கதிர்காமநாதன் நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் தவிர கொழும்பிலேயே வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்தும்விட்டார்.

இடைப்பட்ட காலங்களில் இனத்துக்குள்ளே கொஞ்சம் தூர வழி உறவுக்காரியான பாக்கியலட்சுமியை மணம் முடித்துக்கொண்டதும் — வரிசைக் கிரமமாக நான்கு பிள்ளைப் பாக்கியங்களைப் பெத்துக்கொண்டதும் - சாதாரண 'சேல்ஸ்ம'னுக ஆரம்பித்து படிப்படியாக நகைக்கடை, புடவைக்கடை நிர்வாகியாகி; பங்காளியாகி, உரிமையாளனுகி வளர்ந்த வரலாறு நீண்டதொரு பழங்கதை.

சுந்தரம்பிள்ளையின் தகப்பனுர் கைலாசம் பிள்ளையருக்கு இவர் ஒரேஒரு ஆண் வாரிசைத் தவிர இன்னமும் இரண்டு பெண் வாரிசுகள். அதில் ஒருவள் சுந்தரம்பிள்ளைக்கு மூத்தவள்; மற்றவள் இளையவள்.

கைலாசம்பிள்ளையர் சுருட்டுக் கொட்டில் வைத்து நடாத்திச் சம்பாதித்ததெல்லாம் உரும்பிராய்க் கிராமத்தில் காணிகளாகவும், வீடுகளாகவும் பத்துக்கும் மேற்பட்டன.

இரண்டு பெண்களுக்கும் சீதனமாக கொடுத்ததுபோக சுந்தரம்பிள்ளையருக்கும் இரண்டு வீடுகளும், காணிகளுமாக கைலாசம் பிள்ளையரின் மறைவுக்குப் பின்னுல் தேறின. அது தவிர பாக்கியலட்சுமி சீதனமாகக் கொண்டுவந்த வீடும், காணியும் உரும்பிராயிலேயே இருந்தது.

ஆனல் இப்பொழுதோ அவருக்கு ஒரு துண்டுக் காணிகூட பிறந்த மண்ணில் இல்லாதவாறு பதினைந்து வருடங்களுக்கு முன்னதாக இருந்த வீடுகள், காணிகளை வித்துச் சுட்டுக் கொழும்போடு முற்றும் முழுதுமாக வாழ்க்கையை அமைத்துக் கொண்டனவும் பழங்கதைகள்தாம்.

ஜூலையில் ஏற்பட்ட கலவரங்களில் எப்படியோ தான் சேர்த்துக்கொண்ட லட்சக் கணக்கான பெறுமதிகள் வீடு, கடைகள், வாகனங்கள், பொருட்களாக தன் கண்முன்னே கொள்ளையடிக்கப்பட்டும், தீயிடப் பட்டும் சேதப்படுத்தப்பட்டதைக் கண்ட பின்னுல் மனைவி, மக்களுடன் திருடர்களுக்கும், தீயவர்களுக்கும் 'கண்ணைக்கட்டிச்' சுருட்டிக்கொண்ட கொஞ்சநஞ்ச நகை பணத்துடன் பிறந்த மண்ணுக்கு வந்து சேர்ந்தபோதுதான் ஒரு வீடு காணியை ஆவது வைத்திருந்து இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டார்.

''எப்படியுமப்பா... இனி நாங்க கொழும்புக்குப் போகேலாது... இஞ்சைதான் யாழ்ப்பாணத்தில ரவுணுக்குக் கிட்டவாக ஒரு காணியை வாங்கி வீட்டைக் கட்டவேணும்.. வீட்டோட காணி அம்புட்டாலும் சரி... அப்பான் புள்ளையளை நல்ல பள்ளிக்கூடங்கள்ல படிக்கப்போடலாம்...''

ஜூலைக் கலவரம் சிறிது சிறிதாகப் பரவிடுமென்று சுந்தரம்பிள்ளையரின் நகைக்கடைத் தெருவுக்கு வரப்போவதை சுழுவாக அறிந்திருந்த அவர் நகைகளையும், கைவசம் இருந்த பணத்தையும் பழைய 'காட்போட்' பெட்டிக்குள் திணித்துக்கட்டி எடுத்துக்கொண்டதாலேதான் இனிமேலும்கூட தாழ்ந்துபோகாத முறையில் பிறந்த மண்ணுக்கு வரவேனும் முடிந்தது.

அகதிகள் முகாமில் இருந்து கப்பலில் பிறந்த மண்ணுக்கு வந்து மூத்த சகோதரி வீட்டை அடையும்வரை அவர் பட்ட அனுபவங்கள் வரலாற்று நிகழ்வுகளே!

''இப்படி உயிரைப் பிடித்துக்கொண்டு வந்து... இஞ்ச கண்டதுகளோடேம் ஒண்டாக் கிடக்கிறத முன்னமே அறிஞ்சிரிந்தா கலகக்காறங்கட கையளில அம்புட்டுச் செத்திருக்கலாம்போல கிடக்கு... பள்பறையெல்லாத்தையும் எங்களோட ஒண்டாக் கொண்டந்து போட்டெல்லே துலைக்கிறுணுகள்...''

முகாமில் இருந்த ஒருமாத காலமும் இப்படிப் பாக்கியலட்சுமிக்கு மட்டும் கேட்கக் கூடியதாக நசுக்கி அலுத்துக் கொண்டதுந்தான் எத்தனை தடவைகள்?

'காட்போட்' பெட்டிக்குள் கொண்டு வந்திருக்கும் நகைகள், பணத்தைப் பாதுகாத்துக் கொள்வதில் எடுத்துக்கொள்ளாத சிரத்தையை அவர் இந்த விசயத்தில் காட்டிக்கொள்வதற்கும் நியாயம் இருந்தது.

அறிவறிந்த வரையில் தாழ்த்தப்பட்டவர்களோடு சமனுக வாழவேண்டி ஏற்பட்ட துரதிஷ்டம் அகதிகள் முகாமில் இருந்த அந்த ஒரு மாத காலமுந்தான். அதை இப்பொழுது நினைத்தாலும் அவருடைய மேனியே நடுங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கடைதெரு பணம் பொருள் துலைஞ்ச தெல்லாம் போகட்டும்.., நீங்க எல்லாரும் தப் பிப் பிழைச்சு வந்ததே போதுமடா...''

கப்பலால் இறங்கி 'பஸ்'சில் கொண்டு செல்லப்பட்டு சொந்தக் கிராமத்தில் இறக்கி விடப்பட்டபோது 'யார் வீட்டை போகலாம்..· அக்கா வீட்டைதான் போகவேணும்... தங் கச்சி இளையவள்தான் குறை நினைக்காள்...' என்ற தீர்மானத்துடன் சுந்தரம்பிள்ளையர் அக்கா வீட்டு வாசலில் மனைவி, மக்களுடன் வந்து நின்றபோது வரவேற்றுக்கொண்ட அவ ளது வீட்டில்தான் எத்தனை நாட்களுக்கு இருப்பது ?

''மச்சாள்... கல்யாணம் கட்டி இவ்வளவு காலமும் நீங்களும் கொழும்போட இருந்திட்டி யள்... ஆசை அருமைக்கு நாங்களொண்டா இருந்து சீவிக்கக் குடுத்துவைக்கேல்ல... இப்ப இந்தக் கலவரத்தால எண்டாலும்... புள்ளை குட்டியளோட ஒண்டா இருந்து வாழக் குடுத்து வைச்சிருக்கு ..''

சுந்தரம்பிள்ளை குடும்பம் அகதிகளாக வந் திருந்த அந்நிய நாட்களில் அக்கா அன்பொழு கச் சொல்லிக் கதைத்துக்கொண்ட வார்த்தை களால் காதுகளை நிறைத்து உள்ளமும் பூரிப் படைந்த அவர் இவ்வளவு காலமும் தான் மனைவி, மக்களை ஊரோடு வீடுவாசலை வைத் துத் தங்கவைத்துக்கொள்ளாதது ரத்த உரித்து களுக்கு எத்தனை ஆதங்கத்தைக் கொடுத்திருக் கிறது என்பதை உணர்ந்தும் நெகிழ்ந்து போனார்.

''இதுகள் வந்தும் இப்ப எத்தினை மாதம்... காசு பணத்தோட வந்ததுகள் ஒரு வீடுவாசலை வாங்கிக்கொண்டு ஒதுங்குவமெண்டு நினைக் கேல்ல... அவனொரு சீவனே மொத்தமாக ஆறு பேர்... இஞ்ச எங்கட புள்ளை குட்டியள் செய்யிற அட்டாதுட்டியோடு அந்த நாலும் வேறை... அதுகள் வந்தேப் பிறவுதான் இந்தப் புள்ள குட்டியளும் பழுதாப்போச்சு...''

அதிகமாக வீட்டில் நிற்காமல் பழைய நண்பர்களையும், உறவினர்களையும் கிடைத்த சந்தர்ப்பத்தில் சந்திக்கப் போய்வந்ததிலே நாட்களைக் கடத்தியும். இழந்த பேரிழப்பால் நொந்து போயிருக்கும் மனதை ஆசுவாசப் படுத்திக்கொண்டிருக்கும் சுந்தரம்பிள்ளையின் காதுகளில் அக்காவின் இவ்வார்த்தைகளும் விழுமானால் அங்கேயே பெரும்பொழுதை அவர்களோடு கழிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை உடைய மனைவி, மக்கள் எத்தனை வார்த்தை களை உள்வாங்கிக் கொண்டிருப்பார்கள் என் பதை அவரது மனத் தராசு அளந்தது,

உறவினர்கள் வீடுகளுக்கு வராமல் யாழ்ப் பாணத்திலும் ஏற்பாடு செய்திருந்த அகதிகள் முகாமில் எத்தனையோ பேர்கள் ஒத்துத் தங் கிக்கொண்டு இருப்பதை சுந்தரம்பிள்ளை அறி வார்.

''சீச்சி.. கொழும்பில பட்ட சீரழிவு போதும்... பேந்தும் இங்கையும் கண்டது களோட ஒண்டாக்கிடக்க எங்களுக்கென்ன தலைவிதியே... ஒண்டுக்கு ரெண்டு சகோதரங் களிருக்கேக்க...''

இரத்த உருத்துக்களோடு நெருங்கி வாழ்ந்த அனுபவம் இல்லாத அவர் ஆரம்பத் தில் இந்த எண்ணம் கொண்டிருந்தபோதும், சொற்களால் சுட்ட வடு இதயத்தைப் புண் படுத்தும்போது 'இப்புடி நடக்குமெண்டதை... ச்சா... தெரிஞ்சிருந்தும் அந்த நேரத்தில இந்த மூளைக்க நுழைய மாட்டேண்டிட்டுதே' என்ற ஞானோதயத்தால் நெகிழ்கையில் 'பறவா யில்லை... அதுக்காக அப்புடிப்போய் கண்டது களோடேம் அகதி முகாமில கிடக்கிறதைவிட.... அக்காதான சொல்லிப்போட்டுப்போறு'... அடிச் சுட்டிக்கரணம் போடவும் சுந்தரம்பிள்ளை யருக்கு தன்மான உணர்வு திரிசங்காய் சுழல வும் கூடியதுதான்.

''என்னவுமப்பா... நான் சொல்றே விழங் குதே... பாக்கிறதை கொஞ்சம் ரவுணுக்குக் கிட்டவாகத்தான் பாரும்...''

'திரும்பவும் கொழும்புக்குச் சென்று கடை களையும், வீட்டையும் திருத்தி விற்றுே; இருக்க

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றின், ஒரு காலப்பிரிவின் உதாரண எழுத்தாளனுகக் கதிர்காமநாதனது பெயரையும் எடுத்துக்கூறி வந்தோம். அப்பெயர் நிற்கிறது; நிற்கும். 'புகழுடம்பு' என்பது உண்மையில் இதுதான்.

— பேராசிரிர் கா. சிவத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியானுல் இருக்க நேர்ந்தாலும் இந்த முறை ஏற்பட்ட அனுபவங்களால் சொந்த ஊரிலும் வீடுவளவு ஒன்று இருக்கத்தான் வேண்டும்' என்ற எண்ணம் கப்பலில் நாடு திரும்பிக் கொண்டிருக்கையிலே சுந்தரம்பிள்ளையின் மூளையில் உதித்த ஒன்று.

அதைக் கட்டாயமாக இப்பொழுது நிறைவேற்ற மனைவி பாக்கியலட்சுமி ஒற்றைக்காலில் நிற்கும் நிலையும் அவருக்கு ஞாபகமாகவே படுகிறது.

''இஞ்சேர் .. எனக்கந்த யோசினை இல்லாமலில்ல இப்பவும் ஒரு இடத்துக்குப் போகத்தான் யோசிச்சுக் கொண்டிருக்கிறன்... யாழ்ப்பாணம் பலாலி ரோட்டில நாகவிகாரை ஒண்டிருக்கல்லே அதுக்குக் கிட்டவாக ஒண்டரைப் பரப்புக் காணியும் வீடும் கிடக்காம்... அதைத்தான் போய்ப் பாப்பமெண்டு யோசிக்கிறன்...''

''யோசிக்கிறேன்ன கொஞ்சம் கூடக்குறையெண்டான்ன அதைத்தான் பாத்து வாங்குங்கோ... வேம்படி... இந்து... சென்ரல்... கைம்பஸ் எல்லாத்துக்கும் கிட்டடியெல்லே..''

'மனைவி என்பவள் மந்திரி போன்றவள்' என்ற வார்த்தை எத்துணை அர்த்தமானது? என்பதை பாக்கியலட்சுமியைத் திருமணம் செய்துகொண்ட பின்னுல் இப்படிப் பல தடவைகளில் அனுபவித்திருக்கிறுர் சுந்தரம்பிள்ளை.

நகைக்கடை மட்டோடு இருந்த அவருக்கு புடவைக்கடை தாபிக்கின்ற ஆலோசனைகள் வழங்கியதுடன் கூடமாட இயக்குகின்ற ஒத்தாசைகளும் புரிந்தவளல்லவா பாக்கியலட்சுமி!

''காணி வீடு எல்லாம் புடிச்சிட்டுது விலையைத்தான் கொஞ்சம் கூடச் சொல்றியள்... என்ர மனிசிக்காறி இஞ்சனேக்க வீடிருந்தா வசதியெண்டு விரும்புறதால விடவும் மனதைக் கானேல்ல... எதுக்கும் நான் நாளைக்கு அச்சவாரத்தோட வாறனே...''

உச்சிப் பொழுதுக்கு சற்று முன்னதாக பாக்கியலட்சுமியுடன் கதைத்த விடையமாக வீடு வளவை வந்து பார்த்துவிட்டு வீட்டுக்காரருடன் பேரம்பேசி வந்தது வரையும் விபரமாகத் துரையருக்குச் சொல்லி நிறுத்திஞர் சுந்தரம்பிள்ளை.

''சரி... நீங்க எதைப்பற்றி வடிவாக அறிய விரும்புறீங்க...''

சுந்தரம்பிள்ளை சொன்னவற்றுல் மனதை நெருடிய ஒன்றை திட்டவட்டமாக அறிந்து கொள்ள துரையர் கேள்வி ஒன்றைத் தூக்கிப் போட்டார்.

''இல்ல நாங்களெல்லாம் தண்ணி அள்ளக்கூடிய அயலட்டமோ எண்டுதான்...'' நறுவிசாக அதைக்கேட்க முடியாமல் தயங்கிஞர் அவர்.

உழைப்பதற்காக ஊர்விட்டு ஊர்போய் பிறமொழி பேசுகின்ற மக்களோடு வாழ்ந்த அனுபவத்தோடும் ஜூலைச் சம்பவங்களின் அதிர்வுகளால் ஏற்பட்ட விளைவுகளாலும் தேய்ந்துபோகாத ஒன்றையா காலாவதியாகி விட்டதென்று கூப்பாடு போடுகிறுர்கள்? என்ற உள்ளுணர்வுடன் துரையர் சுந்தரம்பிள்ளைக்குச் சொன்னுர்.

''இஞ்சை பாருங்கோ.. இவடத்தில உதுகள் ஒண்டையும் பாக்கிறேல்ல... இஞ்சை நீங்க உந்த எண்ணத்தோட வீடு வாங்கிஞ இருக்கமாட்டியள்...''

துரையர் உதிர்த்த வார்த்தைகளின் தாக்கத்தைத் தாங்கமாட்டாதவராய் காரை நோக்கி நடந்தார் சுந்தரம்பிள்ளை.

(யாவும் கற்பனை)

ஏன் போனது ?

குடிகாரன்
வீதியில் போகும்
பெண்களை கேலிசெய்து
உதைகள் வாங்குவான்.

செத்துப்போன
அப்பாவின் சொத்துக்காக
தெருவில் வந்து
சண்டை போடுவர்
சகோதரர்மார்.

பணம் அனுப்பாத
பிள்ளையின் போக்கை
பக்கத்துவீட்டுப் பாட்டி
முச்சந்தியில் சொல்லி
மூக்கொழுக அழுவாள்.

சீர்திருத்தம் பேசும்
சின்னப்பண்ணை
அரிஜனப் பெண்ணின்மேல்
ஆசைப்பட்ட - பிள்ளையை
அடிக்கக் கையை ஓங்குவார்.

இந்த
சண்டைகளை
விலக்காமல்
வேடிக்கை பார்த்தபடி
ஏன்போனது மாலைவெய்யில் !

— மேத்தாதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் புகழ் பூத்த கலைஞர் வரிசையில்.. 2

கே. டானியல்

தாழ்த்தப்பட்ட — ஒடுக்கப்பட்ட மக்களின் கண்ணீர்க் காவியங்களை, அவர்களது பேச்சு வழக்கிலேயே யதார்த்தமாக சிருஷ்டிக்கும் ஆற்றல் மிக்கவர் எழுத்தாளர் டானியல். இவர்களின் போராட்டங்களுக்காகக் குரல் கொடுத்தும் சிறைசென்றும் தமது பங்களிப்பை உற்சாகத்தோடு நிறைவேற்றியவர். இவரை அறியாத எழுத்தாளர் இலர். வாசகர்களும் இவரைப்பற்றி நிறையவே தெரிந்துவைத்திருக்கிறார்கள். இந்த மனிதாயவாதியின் உருவப்படத்தைத்தாங்கி இவ்விதழ் 'தாரகை' வெளிவருகிறது.

''இலக்கியத்தையும் வாழ்க்கையையும் எப்படிப் பிரிக்க முடியாதோ, அதே போலத்தான் இலக்கியத்தையும் அரசியலையும் பிரிக்கமுடியாது'' என்ற பிரகடனத்துடன் இலக்கியத்தையும் அரசியலையும் இறுகப் பிணைத்துக் கொண்டு சதா செயல்பட்டு வருபவர்தான் எழுத்தாளர் கே. டானியல் அவர்கள்.

வெகுஜனங்கள் மத்தியில் அரசியல் ரீதியிலும், புத்தி ஜீவிகள் மத்தியில் எழுத்தாளர் ரீதியிலும் மிகப் பிரபலம்பெற்றுள்ள இவரிடம், ''இச்சமூக அமைப்புக்குள் ஒன்றுக்குள் ஒன்றாகப் பல அசுத்தப்படிமங்கள் படிந்து கிடக்கின்றன. இந்த அசுத்தப் படிமங்களை ஒரு பேனா பிடிக்கும் எழுத்தாளன் சுரண்டி எடுத்துவிடுவான் என்பதை உங்களால் ஒப்புக் கொள்ளமுடியுமா ?'' என்று யாராவது கேட்டால் ஒப்புக்கொள்ளவேமாட்டார்.

''எழுத்து மாயைக்குட்பட்ட எத்தனை எழுத்தாளர்கள் சேர்ந்தாலும் அந்தப் படிமங்களில் ஒரு சொடுகுப் பிரமாணத்தையாவது அசைத்துவிடமுடியாது. அந்தப் புரையோடிப் போன பலம்வாய்ந்த அசுத்தப்படிமங்களைக் கடப்பாரை கொண்டு தகர்ப்பவர்களுக்கும், பீரங்கி கொண்டு தகர்ப்பவர்களுக்கும் வேண்டுமானால் எழுத்தாளன் உற்சாகம் கொடுக்கும் - ஆதரவு கொடுக்கும் பங்கினை மாத்திரமே செய்யலாம் - அவ்வளவுதான்.'' என்று மிக நிதானமாகவே கூறுவார்.

பொதுவில் இப்படிப்பட்ட வாழ்க்கைக் கணிப்புக்களை எழுத முற்படும்போது எந்த வித சோலி சுரட்டுமில்லாமல் குறிப்பிடப் படுபவருடைய இலக்கியத்தோடு இணைந்துள்ள பகுதிகளையே மிகைப்படுத்தி எழுதி விடுவது தான் இயல்பாகும். திரு. டானியலைப் பொறுத்தவரையில் இந்த இயல்பு மீறப்பட வேண்டியதாகவே ஆகிவிடுகிறது.

1927ம் ஆண்டு பங்குனி 25ம் நாள் ஆனைக் கோட்டையில் பிறந்த இவர் ஏழாவது வயதில் படிக்கத்தொடங்கி, பதின்மூன்றாவது வயதிலேயே — ஐந்தாவது வகுப்புடன் தனது பாடசாலைப் படிப்பை நிறுத்திக்கொண்டார்.

பொன். பொன்ராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய 16 வயதிலேயே பொது விவகாரங்களில் ஈடுபாடு கொண்ட இவர், யாழ்ப்பாணத்தின் மண்ணுடன் கூடப்பிறந்த சாதி வெறித் தாக்குதல் பலதுக்கு இலக்காகியமையால் சாதி அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்த இயக்கங்களிலேயும், நிலப் பிரபுத்துவத்தின் மிச்சசொச்சங்களில் ஒன்ருன சாதி அமைப்பை அடியோடு ஒழித்துவிடும் சித்தாந்தத்தைக் கொண்ட ஒரு பொதுமை நோக்குடைய அரசியலேயும் 21 வயதில் தேர்ந்தெடுத்துக்கொண்டார். இதன் காரணமாக அன்றிலிருந்து இன்றுவரை இவர் பங்கெடுக்காத (இயக்க ஆதரவுடனுன) சாதி எதிர்ப்புப் போராட்டங்களே இருக்கமுடியாதென்று அறுதியிட்டுக்கூறலாம்.

1949ம் ஆண்டளவில் தமது 21வது வயதில் எழுத்துலகில் அழுத்தமாகவும் - ஆழமாகவும் காலடி பதித்த இவர், இலக்கியப்பரப்பில் நிகரற்ற முறையில் பதிவுசெய்யப்பட வேண்டிய ஒரு ஆற்றலாளனுகிவிட்டார்.

23வது வயதில் நல்லூரில் திருமணம் செய்தார். ''எழுத்து எனது இரண்டாம் பட்சமான வேலே'' என்று புகழ்கொடியில் பறந்த போதும் சிலுப்பிக்கொண்டு கூறுகிறுர்.

''வாழ்க்கையையும் — இலக்கியத்தையும் — அரசியலேயும் வெவ்வேருகப் பார்த்துவிடாதீர்கள்!''

''படிப்பவைகள் சகலத்தையும் உங்கள் வாழ்க்கை அனுபவங்களோடு ஒப்பிட்டுப்பாருங்கள்! ஒத்துவராத பட்சத்தில் அவைகளே நிராகரியுங்கள்.''

''இலக்கியத்தினுல் சகலத்தையும் சாதிக்க முடியும் - சாதிக்க முடியாதது எதுவுமே இல்லே. என்ற மாயைத் திரையைக் கிழித்தெறிந்துவிட்டு வெளியே வாருங்கள்!''

''சமூக மாற்றத்திற்கான உண்மைக்கு விசுவாசமான செயற்பாடுகள் நடக்கும்போது, வெறும் பார்வையாளனுக மட்டும் நில்லாது அதன் பங்காளர் ஆகுங்கள்!''

''மொழி, நாடு, இனம் என்பவைகளுக்கெல்லாம் முற்பட்டவனே மனிதன். 'மனிதன் என்ற இந்த இவன் ஒரே உலகம், ஒரே நீதி என்ற ஆளுமைக்குட்பட்ட உலகினே ஒருநாள் அடைவான் என்பதினேத் திடமாக நம்புங்கள்!''

இவ்வாருக, உரத்த குரலில் — பலத்த ஆவேசத்துடன், இவர் பல்வேறு மேடைகளில் — பல்வேறு பேட்டிகளில் ஆணித்தரமாகக் கூறியதைச் சகலரும் அறிவர்.

வடமாகாணத்திலுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களுள் இவர் சென்றுவராத கிராமங்கள் ஒன்றுகூட இருக்கமுடியாது. கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு அவர்கள் பேசும் தொனிமுறையிலேயே - பேச்சு வழக்கிலேயே அவர்களுக்கு விசயங்களே எடுத்துச்சொல்லும் ஆற்றல் மிகவும் கனதி மிகுந்ததெனலாம். ''மக்களிடமே படிக்கவேண்டும்; அவர்களிடம் படித்ததை அவர்களுக்கே திருப்பிக்கொடுக்க வேண்டும்.'' என்று அடிக்கடி இவர் சொல்லிக்கொள்வதற்கு இக்கிராமப்புற வாழ்க்கையோடு சேர்ந்துபோனதே உதாரணமாக இருக்கிறது.

மிகவும் வறிய சலவைத் தொழிலாளர் குடும்பத்தில் பிறந்த இவர், தனது பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்ட பருவத்திலிருந்தே பலவித அடிமை குடிமை முறைகளுக்கு இலக்காகி, அவைகளால் அவஸ்தைப்பட்டவற்றை இப்போதும் தாழ்வுச்சிக்கல் மறைப்பின்றி மனந்திறந்து சொல்லும்போது நெஞ்சம் உருகிவிடும்.

தனது பிறப்புத் தொழிலிலிருந்து விடுபட இவர் பார்த்த தொழில்களோ பலப்பல.

லோன்றி, கள்ளுக் கொட்டில், கடல் தொழில், கூலித் தொழில், பெயின்ரிங், கால் நடை வளர்ப்பு, குளிர்பான வியாபாரம், பழைய இரும்பு வியாபாரம், வெல்டிங், கடைச்சல் ஆகியவிதங்களில் அவைகளே நிரைப்படுத்தலாம்.

ஏறக்குறைய 350க்கும் அதிகமான சிறுகதைகளேப் படைத்துள்ளார். கலைத்துவ ஆற்றல் இவர் சிறுகதைகளில் மெய்யிட்டு நிற்கும். எதிரணியினர்கூட இவரது சிறுகதை ஆளுமை குறித்து வியப்புக்குறிப்புடன் போற்றுவர். இவரது சிறுகதைகளுள் மூன்றுக்கு முதற்பரிசுகள் கிடைக்கப்பெற்றதுடன், பிறமொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ருஷிய நாட்டில் இவர் கதைகள் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்து சஞ்சிகைகளான சரஸ்வதி, ஜனசக்தி, தாமரை, சாந்தி ஆகியவற்றில் இவரின் சிறுகதைகள் பரவலாக வெளிவந்துள்ளன. இதுவரை இரு சிறுகதைத்தொகுதிகளும் வெளிவந்துள்ளன. ஒன்று 'டானியல் சிறுகதைகள்' மற்றது 'உலகங்கள் வெல்லப்படுகின்றன' உலகங்கள் வெல்லப்படுகின்றன என்ற சிறுகதைத் தொகுதிக்கு சாகித்திய மண்டலத்தின் 1974ம் ஆண்டுக்கான பரிசு கிடைக்கப்பெற்றது.

இவர் எழுதிய நாவல்களில் இதுவரை புத்தக உருவம் பெற்றவை 'பஞ்சமர்', 'போராளிகள் காத்திருக்கின்றனர்', 'கோவிந்தன்' 1973க்கான சாகித்திய மண்டலப் பரிசினை 'பஞ்சமர்' பெற்றிருக்கிறது. இதுவரை பத்திரிகைத் தொடர்கதைகளாக மூன்று வெளிவந்திருப்பதுடன், இவரால் எழுதப்பட்ட 'அடிமைகள்', 'கானல்', ஆகிய நாவல்கள் அச்சிலும் (இந்தியாவில்) இருக்கின்றன. இவருடைய இரண்டாம் பாகம் உள்ளடங்கிய 'பஞ்சமரும்,' 'கோவிந்தனும் இந்தியாவிலேயே வெளிவந்தவைதான்.

பல சந்தர்ப்பங்களில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட இவர் அக்காலத்திலேயே 'பஞ்சமர்' நாவல் முதல் பாகத்தை எழுதி முடித்தார். பின்பு, அரசினால் சிறைப் பிடிக்கப்பட்ட இவர் 'பஞ்சமரின்' இரண்டாம் பாகத்தை சிறை வாழ்க்கைக் காலத்திலேயே குறிப்பெழுதி முடித்தார். பின்புதான் அது முழுமையாக இரண்டாம் பாகமாக வெளிவருவதற்குமுன் - தனிப் பஞ்சமராக இருந்தபோது 'பஞ்சமரின் உண்மைத் தனத்தை பகிரங்கமாகவே ஜதார்த்த பகைப்புல - வெகுஜன வெளிப்பாட்டு நாவலென' விமர்சித்தும், சிலவேளை அளவுக்குமீறி ஆ, ஊ எனப் புகழ்ந்த விமர்சன மேதைகள், பின்பு — இவரோடு ஏற்பட்ட கருத்து முரண்பாடு – காழ்ப்புணர்வு காரணமாக 'மீளாய்வு' என்னும் பெயரில் காயடிப்பு— இருட்டடிப்புச்செய்து எதிரிவர்க்கத்திற்கு துணை செய்ய முயன்றபோதும், வெகுஜன மக்கள் தொடர்பினை இறுக்கமாகக்கொண்ட டானியலின் கிருஷ்டித்திறனை - பிரபல்யத்தை மழுங்கடிக்க முடியவில்லை. மாறாக - விமர்சனத் தளபதியினதும், அவர் அடியாட்களினதும் எதிர்ப்புக்கும் - பகைப்புக்கும் பின்னால்தான் டானியலின் வலுவையும், பஞ்சமர் நாவலின் மகத்துவத்தையும் உள்நாட்டு மக்கள் மாத்திரமல்ல, வெளிநாட்டு மக்களும் 'பளீரென' அறியும் சந்தர்ப்பம் கூடுதலானது. இக்காலகட்டத்தின் பின்னாலேதான் இந்தியாவில் இவருடைய நாவல்கள் பிரசுரம் செய்யப்பட்டன. இவர் சார்ந்த கருத்தரங்குகள் அங்கு பரவலாக நிகழ்ந்தன. 'ஒரு விமர்சகனால்தான் ஒரு எழுத்தாளனை உருவாக்கவும் - அழிக்கவும் முடியும்' என்ற கூற்றை டானியல் தமது சாதனைகள்மூலம் முறியடித்து எழுத்தாளன் மூலம்தான் விமர்சகன் உயிர்வாழமுடியும் என்பதையும் இனங்காட்டியுள்ளார். ஏனெனில், 'மக்களிடம் கற்றதை மக்களிடம் கொடுப்பவன்' தானே எழுத்தாளன். விமர்சகர்கள் எழுத்தாளனிடம் கற்பவர்கள். புத்தகப் பூச்சிகள். (ஓ! புத்திஜீவிகள்)

இன்று டானியலின் கிருஷ்டி இலக்கியங்களை ஒரு விமர்சனப் புலியும் விமர்சிக்க முன் வருவதில்லை. சரியான பயம். தங்கள் வர்க்க நிலைபாடு வெளிச்சமாகிவிடும் என்பதுதான் முற்றிலும் உண்மை.

இவர் பலம்வாய்ந்த சக்தியாளனாக இருப்பதற்கு இரண்டு அமைப்புக்கள் இவருக்கு உறுதுணையாக எப்போதும் இருக்கின்றன. ஒன்று 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்' மற்றது 'மக்கள் கலை - இலக்கியப் பெருமன்றம்' இவ்விரண்டினதும் அமைப்பாளர் டானியல் அவர்களே.

1971ல் பஞ்சமர் முதல்பாகம் எழுதப்பட்டபோது ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிக்காகப் போராடிய குற்றத்திற்காக இவர் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். தலைமறைவில் ஒரு கிராமத்தில் தங்கியிருந்தபோது, அந்த நாவலை பூர்த்திசெய்யும் வரையும் அக்கிராம மக்கள் குடிக்கொருவராக நாள்வீதம் உணவளித்து ஒவ்வொரு நாட்களின் பாதுகாப்பையும் கிராமத்தவர்கள் கூட்டமைத்து நேரம் வைத்துச்செய்த ''அந்தப்பணி தனக்காக அளிக்கப்பட்டதல்ல என்றும், தான் சார்ந்த கொள்கைக்காக அளிக்கப்பட்டதுவே'' என்று அவர் இன்றும் மனந்திறந்து உணர்வு மயப்பட்டுக் கூறுவார்.

தமக்குப்பிடித்த எழுத்தாளராக ருஷிய எழுத்தாளர் மாக்சிம் கோர்க்கியைத் தெரிந்துள்ளார். கோர்க்கியின் முரட்டு சுபாவமும் இவரிடமுள்ளது. ஆனால், மக்களிடம் அணுகும் முறை வித்தியாசமானது. கூட்டணி ஆதர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளர் ஒருவர் இவரோடு கதைக்கும்போது அவரோடு உடனே முரண்படமாட்டார். அந்த நபர் சத்தியத்தோடு நம்புகின்ற சரி பிழைகளை மெல்லமெல்லச் சொல்லித் தமது கருத்துக் களையும் திணிக்க முயல்வார். 'இவர் தேர்தல் களில் வாக்களிப்பது விசர்வேலை' என்பார். 'ரசியா கொம்யூனிச நாடல்ல. அது இப்ப பிழையாப் போயிட்டுது என்பார் - சீனவும் இப்ப அப்படித்தான் பிழையாப் போயிட்டுது என்பார். இவைகளைக் கேட்கும் பலர் இவர் அரசியலைவிட்டு ஒதுங்கிவிட்டதாகவே கருது வர். ஆனல், இவரோடு மிக நெருக்கமாக - மிக இறுக்கமாக பழகிய நண்பர்களுக்குதான் இப்படி விமர்சித்து உண்மை வழிக்கு மக்களை அழைத்துச்செல்லுகின்ற ஒரு நெறிமுறைமை யான அரசியலும் இருக்கின்றதென உணர முடியும். (சிலர் தனக்கு அரசியல் எதுவுமில்லை யென்பதுபோல 'இரட்டைத்தொனியில் பேசி' ஏமாற்றிவிட்டதாகக் கூறி அகலப்பிரிந்து அர சியல் சாக்கடையொன்றுக்குள் மூழ்கமுயல்வர்.)

தமிழர்களின் நிகழ்காலப் பிரச்னைகளை ஒதுக்கிவிட்டு சாதிப் பிரச்னையைத்தான் எழுது கிறீர்கள்? என்று பொதுவாகப் பேசப்படு கிறதே - இதற்கான உங்கள் பதில் என்ன? என்று கேட்டால் அவர் சொல்லும் பதிலும் நியாயமாகவேபடுகிறது.

''சாதிப் பிரச்னை தமிழர்களின் நிகழ் காலப் பிரச்னை இல்லையா? சாதிப் பிரச்னை தமிழனின் அன்றாடப் பிரச்னை. முற்றிலும் முற்றத்தில் நடக்கும் பிரச்னை, தமிழர்களாக இருக்கும் ஒரு பகுதித் தமிழர்களைத் தமிழர் களாக அங்கீகரிக்க மறுக்கும் பிரச்னை. இதை ஒப்புக்கொள்ள பிடிவாதமாக மறுக்கும் மனித நேசமற்ற நோயாளர்களின் மனதை எனது பேனா புண்படுத்துமானல் நான் சரியான தையே செய்கிறேன் என்பதுதான் அர்த்தம்.'' தனது மனதைச் சதா நெருடுகின்ற - பற்றி எரிந்துகொண்டிருக்கிற பிரச்னையை சத்திய ஆவேசத்துடன் கூறுகின்றபோது நாமும் அவ ருடன் இணைந்துபோய்விடுவோம்.

தமக்குப்பிடித்தமான - அவர் எழுதிய சிறு கதைகளில் ஒன்றைத் தேர்ந்து கூறுவதில் சல னப்படாமல் பட்டென்று 'வீராங்கனைகளில் ஒருத்தி'யைக் கூறுவார் நாவலில் 'பஞ்சமர்' தெரிந்த சங்கதிதானே!

புதுக்கவிதை - மரபுக்கவிதை சர்ச்சைக்கு முடிவுகாண வேண்டுமென்று விரும்புவார் - சரியான களம் அமைத்து எமது ''மக்கள் இலக்கியம்' சஞ்சிகையில் இச்சர்ச்சைக்குத் தீர்வு கண்டுவிடவேண்டுமென்று ஆலோசனை கூறினலும் 'கவிதையிலோ வேறு எந்த சிறு கதை - நாவல்களிலோ எதுவாயினும் புதிசு - பழசு என்ற வாதத்திற்கே இடமில்லை. வேண்டு மானல் புதிய விசயங்களைச் சொல்லுபவையை புதுக்கவிதையென்றும், பழைய விசயங்களைச் சொல்லுபவையை பழங்கவிதை' யென்றும் தெளிவோடு சொல்லுவார்.

வறுமையில் பிறந்து வளர்ந்து, இன்று மத் தியதர வர்க்கத்தோடு ஒப்பிடக்கூடிய வசதி களோடு வாழ்ந்தபோதும் சாதாரண எளிமை யாளனகவே காணப்படுகிறார். வந்த பாதையை எப்போதும் நினைவுகூர்ந்துகொண்டே இருக் கிறார்.

இலக்கிய ஆளுமையும், அரசியல் - வாழ்வு அனுபவ ஞானமுதிர்ச்சியும் இவரை உன்னதப் படுத்தி நிற்கின்றன. இவருடைய இலக்கியப் படைப்புக்கள் ஒரு பெறுமதிமிகுந்த ஆவண மாகப் பேணிப்பாதுகாக்கப்படவேண்டுமென்று கலாநிதி சண்முகதாஸ், பேராசிரியர் சிவத் தம்பி போன்றோர் குறிப்பிட்டது மிகச்சரி யானதே!

இவருடைய அரசியல் வாழ்வின் சத்திய நேர்மைக்கும், பிரச்சனைக்கு முகம்கொடுக்கும் போராட்டத் துணிவுக்கும் அனுபவ ரீதியான அறிவுக்கூர்மைக்கு பலபெரும் அரசியல் தலை வர்கள் இவருக்கு மரியாதை செலுத்துவர். மதிப்பு மரியாதையோடு இவருடைய ஆலோ சனைகளையும் - அறிவுரைகளையும் அடக்கத் தோடு கேட்டிருந்து பெற்றுச்சென்ற அரசியல் பெரியார்கள் பலர்.

''கிராமப்புறத்தை நோக்கித் தனது கவ னத்தைத் திருப்பி, அந்த மண்ணில் தனது காலடியை இறுகப்பதிக்க மனமற்ற எந்த ஒரு சிருஷ்டிகர்த்தாவும், மக்கள் பலமற்ற எந்த அரசியல்வாதியும் மக்கள் இலக்கியம் படைப் பது - மக்கள் பணிசெய்யமுற்படுவது மிகவும் வேடிக்கையானது.'' என்று ஆக்ரோசத்துடன் இவர் கூறிக்கொள்வதை சகலரும் கரகோசத் துடன் ஏற்றுக்கொண்டு இவரின் அடிச்சுவட் டினை பின்செல்லவேண்டும்.

இன்று 56 வயதைத் தாண்டிக்கொண் டிருக்கும் திரு. டானியல் 'விடாப்பிடியாக' இன்று தனது பணிகளை அசுரவேகத்தில் தொடர்ந்துகொண்டே இருக்கிறார். அவர் பணிகள் தொடர்ந்து பெருகிச்சிறக்க வாழ்த்து வோம்.

❀

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாரகை"
சிறுகதைப் போட்டியின் ஆதரவுக் கரங்கள்...

★ வழக்கறிஞர் C. D. சின்னையா L. L. B.
(வழக்கறிஞர் – தந்தை சின்னையா ஞாபகார்த்தமாக)

★ 'குட்வில் கிளினிக்'
கல்முனை வீதி, மட்டக்களப்பு.

★ 'சிற்றி கிளினிக்'
திருமலை வீதி, மட்டக்களப்பு.

★ Dr. S. முருகானந்தன்
'அன்பகம்', கரவெட்டி.

★ பி. ரி. அரசன் அன் சன்ஸ்
பார் வீதி, மட்டக்களப்பு.

★ 'சமர் குரூப்'
மத்திய வீதி, மட்டக்களப்பு.

★ 'ஈஸ்ரன் அக்கடமி'
வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு.

★ 'சியாமளா நகை மாளிகை'
பிரதான வீதி, மட்டக்களப்பு.

★ திரு. கா. ஆறுமுகராசா (ஆசிரியர்)
புனித மிக்கேல் கல்லூரி, மட்.

★ 'டிஸ்கோ ரீ றூம்'
புகையிரத நிலைய குறுக்கு வீதி, மட்டக்களப்பு.

★ திரு. பி. ஜோஸப்
'சுபராஜ் இன்', மட்டக்களப்பு.

ஈழத்து இலக்கியவானில்
'தாரகை'
தொடர்ந்து ஒளிவீச
எமது வாழ்த்துக்கள்...

கல்கிசன்ஸ்

147, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

தொலைபேசி : 23711

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லுங்கள் ! கவனியுங்கள் !

தற்கால நாகரீகத்திற்கேற்ற
பலவகைப் பிடவைத்தினுசுகள்
கல்யாணப் பட்டுப்பிடவைகள்
வெளிநாட்டு சூட்டிங் சேட்டிங்
மற்றும்
ரெடிமேட் உடைகளையும்
ஒரே இடத்தில் கொள்வனவு செய்ய
நாடுங்கள்

ஜப்(f)று டெக்ஸ்டைல்ஸ்

19, சென்ரல் றோட் :: மட்டக்களப்பு.

தொலைபேசி: 065 – 2091

- புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்
- சுவீப் டிக்கட்டுகள்
- குழந்தைகளுக்கான பால்மா வகைகள்
- எண்ணெய், பலசரக்குச் சாமான்களுக்கு . . .

ஸ்ரீ ஸ்ரோர்ஸ்

139, திருமலை வீதி — :: — மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ புதினப் பத்திரிகைகள்

❋ சுவீப் ரிக்கட்டுகள்

❋ யாழ்ப்பாணம் திறம் சுருட்டு, புகையிலை,
நல்லெண்ணெ சாய்ப்புச் சாமான்களை

மலிவாகப் பெற்றுக்கொள்வதற்கு

பரமேஸ்வரி ஸ்ரோர்ஸ்

இல. 1, திருமலை வீதி — மட்டக்களப்பு.

ஆரம்பம்: 1928. தொலைபேசி: 065 — 2083

With the best Compliments

from

NEW ANCHENEYE TIMBER DEPOT AND FURNISHING HOUSE

SHAN TRANSPORT SERVICE

BATTICALOA.

Prop. R. Shanmugarajah

T. P. Nos: Office : 065 - 2037
Residence : 065 - 2137
Stores : 065 - 2038

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்த மாளிகை

இன்று

மட்டக்களப்பில் முன்னணி வகிக்கும்

ஒரே ஸ்தாபனம்

உயர்ந்த ரகம்! நிதான விலை!

- வனிதையர் மனதைக்கவரும் வசீகரமான பிடவைத் தினுசுகள்
- ஆடவர் விரும்பும் அழகான சேட்டிங் சூட்டிங்
- குழந்தைகளுக்கான றெடிமேட் உடைகள்

அனைத்தையும்

ஒரே இடத்தில் குறைந்த விலையில்

வாங்குவதற்கு சிறந்த ஸ்தாபனம்

வசந்த மாளிகை

42, பிரதான வீதி — மட்டக்களப்பு.

பழைய படங்களைப் புதுப்பிக்கவும்

நவீன டிசைன்களில்

பிறேம் போட்டுக்கொள்வதற்கும்

★ அழகிய கலர்ப் படங்களுக்கும்

★ அவசர பாஸ்போர்ட் படங்களுக்கும்

★ திருமணம், பிறந்தநாள் போன்ற வாழ்வின் மறக்கமுடியாத சம்பவங்களை இயற்கையாகப் படம் பிடிக்கவும்

★ அவுட்டோர் படப்பிடிப்புகளுக்கும்

எங்களை நாடுங்கள்

கே. வி. எஸ். போட்டோ

139 - B, திருமலை வீதி — மட்டக்களப்பு.

(உரிமையாளர்: K. V. சபா)

(இங்கு 'வீடியோ டெக்' வாடகைக்கு விடப்படும்)

With best Compliments
from

S. A. SELVANAYAGAM & SONS.

MOTOR & TRACTOR ENGINEERS AGENTS & MERCHANTS
BATTICALOA

Sole Distributors for

CEYLON OXYGEN LIMITED	– For Industrial Oxygen, Acetylene and Welding requisites.
CEYLON CHEMICAL INDUSTRIES (COLOMBO) LTD.	– For Duco, Dulux & Pentalite Paints and Ancilaries.
E. B. CREASY & CO. LIMITED	– For YUASA Batteries and Lotus Cycle Tyres and Tubes.

Dealers for:

CEYLON PETROLEUM CORPORATION	For all Petroleum Products and Hoist Service.
COLOMBO GAS & WATER CO. LTD.	– For L. P. Gas Cylinders
CEYLON TYRE CORPORATION	– For Kelani Tyres and Tubes.

Sub Dealers for

ROWLANDS LIMITED
HUNTER & CO. LTD.
SATHIYAWADI STORES & MOTOR TRANSPORTERS LTD.
for FORD TRACTORS
SRI LANKA STATE TRADING (GENERAL) CORPORATION.

Our Motor, Tractor & Motor Cycle Workshop for All Kinds of Repairs

All these under the management of

MR. P. Rajan Selvanayagam

Proprietor.

S. A. SELVANAYAGAM & SONS
BATTICALOA.

T'Phone { Office : 065 - 2676
Resd. : 065 - 2210

T'Gram : "SELVAM"

- வெளியீடு : 'தாரகை' கலை இலக்கிய வட்டம்.
- கௌரவ ஆசிரியர் : கண. மகேஸ்வரன்.
- முகவரி : 21/4, பாத்திமாகிரி வீதி, மட்டக்களப்பு.
- அச்சுப்பதிவு : கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org